உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சிவாநந்தமூர்த்தி ஸ்வாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சொரூபானுசந்தான மூலம்.

இஃது

ஒரு ஸாதுவால் பழைய பிரதிக்கிணங்கப் பரிசோதிக்கப்பட்டு,

சென்னை:

ஆநந்தாஸ்ரம ஸாதுமஹாசங்கத்தாரால்

மதராஸ் டைம்ஸ் அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1914. [அணா 3.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ சிவாநந்தமூர்த்தி ஸ்வாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

சொரூபானுசந்தான மூலம்.

இஃது

ஒரு ஸாதுவால் பழைய பிரதிகளிணங்கப்

பரிசோதிக்கப்பட்டு

சென்னை:

ஆநந்தாஸ்ரம ஸாதுமஹா சங்கத்தாரால்

மதராஸ் டைம்ஸ் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1914. [அணா 3.

ஓம்
தத் ஸத்.
பரப்பிரஹ்மணேநம:

* சொரூபானுசந்தானம்.

பாயிரம்.

விநாயகர் துதி.

விருத்தப்பா.

இந்தச் சகமோ கக்கனவை யினிதாக் கண்டு மகிழ்வதற்கு
அந்தப் பரம வருள்வெளியை யகலா வநுபூ தியையளித்தும்
மந்தக் கருத்தால் வருந்துமெனை மருவ வருளிற் கூட்டியருள்
சிந்தைக் கினிய தேசிகரே சிதம்ப ரேச விநாயகரே. (க)

சிவஸ்துதி.

திருவரு ணிலையைத் தந்துஞ் சித்தமிச் சகமோ கத்தில்
மருவிநின் றெனைப்பா சத்தில் வன்புறக் கொடுசெல் கின்ற
தருவினைப் பயனு மென்னி லண்ணலே தடுத்துக் காப்பாய்
பொருவரை வில்லெடுத்துப் புரநகைத் தெரித்த நாதா. (உ)

இதுவுமது.

வினைவழி யியங்கி நீள்கால் மெய்யுணர் வின்றித்தோன்றி
இனையபல் பிறப்பின் ஞாலத் திளைத்துமுத் தாபத் தாலே
தனையடைந் தின்னும் பாசந் தளைத்திடிற் பினைமீள் விப்பார்
நினையலாற் றலைவர் யாரே நிறைபரா நந்தத் தேவே. (ங)

தக்ஷிணாமூர்த்தி துதி.

பஞ்ச கோச வைப்பதனைப் பகுத்திங் கெனது நிலையுணர்ந்தும்
விஞ்சு மாயா வரணத்தால் மேவு மயலிற் படுத்தவரும்
எஞ்சு பிரார்த்த வசமாக யியன்றிங் குழலு மடநெஞ்சே
தஞ்ச மருள்த க்ஷிணாமூர்த்தி சத்பா வனையிற் சுகிப்பாயே. (ச)

---

* பேதத்திற்குப் பாதகமான யுத்தியினாலும் அபேதத்திற்குச் சாதகமான யுத்தியினாலும் அந்தக்காண விருத்தியைத் தைலதாரைபோல் நிறுத்தி நிரந்தரம் பழகல்.

மனத்தைச் சிவபாவனையி னிருக்கல்.

தேடிய பொருள்யா மாகச் சிவனரு ளிருக்கப் பெற்றும்
வீடிய மாயா சங்கற் பத்தினால் விரிந்த ஞாலம்
நாடிய நாம ரூப நாட்டமா நலியு நெஞ்சே
கூடிய பேரா னந்தக் குறைவில்வாழ் வதிற்சு கிப்பாய். (ரு)

அகில புவன முற்றுநிறை யாத்மா கார மாகியும்பின்
சகல மதனிற் றிரிபுடியாந் தனைத்தான் வேறாக் காணுமயல்
அகல வநுசந் தானத்தா லருட்கே வலமா நிகழ்நெஞ்சே
நிகில சர்வ சாக்கியதா நிறைநீள் வாழ்விற் சுகிப்பாயே. (சா)

உலக மெல்லா மொருங்காள வும்பர் வீட்டி லுறைந்தபினும்
நிலனிற் சிறந்த மனைபூமி நிலவு பணிக டனமுதலாக்
குலவு பொருள்போ யிற்றென்று குறைவைத் துழலு மடநெஞ்சே
அலகில் பொருளு நாம்நமதா மனைய வாழ்விற் சுகிப்பாயே. (எ)

சிவா நுக்கிரகத்தை வியந்து கூறியது.

சங்க மடியா வாசனைதான் சனிக்கு மென்னத் தனிவாசம்
இங்ஙனுடிச் சிதம்பரத்தி லேகாந்தத்தி லினிதிருந்தும்
அங்ஙன் சிவ கருணையினா லளிக்கத் தனநா டியநெஞ்சே
எங்கு நிறைந்து முத்தர்சித்த மெல்லா நடேசர் தருங்கண்டாய். (அ)

சகமா மோகத் தெழுமறிவாற் றுனென் றொருவன் சனித்தாங்கே
மிகுமா சங்கற் பக்கடலின் மிதந்து மமிழ்ந்து மிகநொந்தே
இகமார் பிறவிச் சுழித்தலையி லியங்கி முத்திக் கரைங்காணு
தகமா கடைவித் திடருனே வருளின் விளையாட் டறியேனே. (கூ)

இந்நூன் மரபுகூறியது.

அருட்குரு வாக்கி னாலு மனந்தநூல் விசாரத் தாலுந்
திருக்கொடு திரிசி யத்தின் செயலினை யனுசந் தித்து
திருத்தமா மநுபோகத்தாற் சித்தமே சிவமா நின்று
பொருத்தமெய் யருளி னாலே புகல்வனிஞ் ஞான நூலே. (க௦)

பாயிர முற்றிற்று.

சொரூபானுசந்தானம்.

அவதாரிகை.

(உலகத்தினியல்பும் உயிர்க்குலங்களினியல்பும் இவை
க்கு மூலகாரணப் பரத்தினதியல்பும் சுருதி
குருவாக்கியம் யுத்தி அநுபவமாய்ச்
சிந்தித்து அனுசந்தானஞ்
செய்தல்.)

விருத்தப்பா.

* சருவ சாட்சி யாநிறைந்த தனிப்பே ரொளியின் றன்வயமா
வருமா சத்தி முக்குணத்தால் வயங்கு ஜீவேஸ் வரசகமாப்
பெருமா லண்ட கோடிகளாப் பிறங்கத் தனதா ரருள்வெளியில்
தருமா சிருட்டி விலாசத்தைச் சதுமா மறையுஞ் சாற்றரிதே. (க)

திகழுஞ் சீவேஸ் வரஜகமாச் சிறந்த புரண சிற்சொருபம்
நிகழுந் தார தம்மியமா நெடிது விரிந்த சராசரங்கள்
இகழுந் துக்க சுகபேத மிலக்கி லாதிங் கிசைந்துழலல்
புகழும் பிரமச் செயலாமோ புந்தி தெளியப் புகலுமெனில். (உ)

அவனை யன்றி யோரணுவு மசையா தென்னு மதிவசனம் [வே
சிவனை யன்றி யெவ்வெவைக்குஞ் செயலொன் றில்லை யென்பது
புவன மெங்கு நிறைபிரம புரண சங்கற் பாகரமாம்
இவனை யன்றி யெவ்வுயிர்க்கு மியக்க மில்லை யீதுண்மை. (ங)

அவனும் புரண சிவஞான மன்றிச் சிவன்வே றிலாசதுபோல்
புவன மெங்குஞ் சராசரமாப் பொலியுஞ் சீவ கோடிகளும்
சிவனை யன்றி வேருகத் திகழா தென்ப துண்மையே [ருனே.
இவன்யா னெனதென் றியற்றும்வினைக் கீடாய் விதிக்குஞ் சிவன்

---

* சமஷ்டி வியஷ்டி வடிவ ஜாக்கிர சொப்பன சுழுப்திகளுக்கு அதிஷ்டானமாகிய பரவஸ்து.

சருவ சத்தி மாஞகித் தழைந்த பரம சிற்சொருபம்
மருவும் யோகி மாயாவி வகுத்த சங்கற் பத்தளவாய்ப்
பொருந்து ஜாலத் தோற்றாவாப் புகுந்த பலவாம் பிம்பங்கள்
வருந்து நோய்க ளிழிவுமுதல் மாயா வியர்க்கிங் கிலாததுபோல். (௬)

சத்தி வசத்தாற் ரேன்றுமுயிர் தானேர் முதலா மானித்துச்
சித்தஞ் சென்ற வழிராகத் துவேஷஞ் செறிந்து புரிகன்மம்
மெத்து சுகதுக் கங்கடரு மேலை வினையாற் பிறந்திறக்கும்
அத்தன் கருணை யால்விளங்கி லழிவில் புரண வடிவாமே. (௭)

* தன்னை யறியாப் பிரமையிற்சேர் சங்கற் பந்தான் பிறப்பாகும்
முன்னைப் பிறவி மோகத்தால் முளைத்த வினையைப் புசித்துழன்று
பின்னைக் கேது வாம்வினையைப் பெரிது மியற்றி யுழைக்குமுயிர்
மின்னைப்போலு மறைந்தெழுந்துவினையான்மெலியுஞ்செயலிதுவே.

சித்தம் பிறந்து ஜெகம்பிறந்த செயலை யூகித் திடுங்காலை
அத்தன் பரம சத்தியிடத் தமர்ந்த மாயைத் திரங்கண்டோர்
இத்தன் னிலையை யுணராமே யிடரின் மூழ்கு முயிர்க்குலங்கள்
சுத்த வுண்மை நிலையடைந்தாற் சுகமா ரகண்ட வடிவாமே. (௮)

பெரிய கடலி லலைபோலப் பிறந்த சித்தஞ் ஜகமாகி
உரிய தனதுண் மையைமறந்தே வுதித்த விச்சா நினைவின்வழி
விரியும் பலசித் திரங்களையே விளங்கக் கண்டு மோகித்துத்
திரியும் பலபா வனையாலே செனித்து மரிக்குந் துயருறுமே. (௯)

கால தேச வஸ்துவெனுங் கனத்த பாவா பாவத்திற்
சால வெழுந்த மனப்பேயைத் தனது விகற்ப வழிசெலுத்தி
ஞால மதனிற் பலகூத்து நடித்தே யோய்ந்து தளர்போதில்
காலன் கையி லொப்புவித்துக் கருதற் கரிய துயர்தருமே. (௧௦)

சகஜா லத்திற் ரேன்றுமனந் தானேர் முதலா வடிவெடுத்தே
அகமா ரிச்சை வழிமயங்கி யதன்சங் கற்பத் தோற்றாவாய்த்
திகழும் பாவை யுடன்கலந்து சித்தங் கருவி னுடன்கூடி
நிகழும் பிரிதோர் வடிவாக நிலனிற் பிறக்கு நெறியிதுவே. (௧௧)

---

* ஜீவசாக்ஷியாகிய கூடஸ்தனை.

* யானு மகண்ட வறிவினிடத் தடைந்த விகற்ப சங்கற்பந்
தானேர் முதலா வெனேமறைத்துத் தனைத்தா னறியாச் சடமாகி
வானே முதல வைம்பூத வடிவாய் நாம ரூபமொடும்
ஏனே வொன்றை யொன்றறியா தியக்கு மாயை யியல்பென்னே.()

† அறிவின் விகற்ப மாய்விளேந்த வனைய மாயைத் திறங்கூறின்
சிறிய வணுவை மலையாக்குந் திகழு மலையை யணுவாக்கும்
வெறிதோர் காட்சி விசித்திரத்தால் விரிந்து விகற்ப சங்கற்பஞ்
செறிந்து தனது நிலைமறந்து திகைக்கு முயிரை மயக்குமதே. (கஙு)

அறிவின் விஷய மாகியுந்தா னதன்சங் கற்ப வளவாகி
குறிவெவ் வேரு முருவமொடுங் கொள்ளும் பெயரும் வெவ்வேருச்
சிறுவர் மருளப் பயபக்தி செறியச் செப்புஞ் சிலக தைபோல்
வெறிதே விளங்கி மறைமாயை விசித்தி ரந்தா னென்சொல்வேன்.

கனவின் விவகா ரம்போலக் கருத்தில் விளேந்த விச்சைவழி
நனவிற் றிடபா வனேயாகி நாளும் வளர்ந்த சகத்தோற்றம்
எனதியா னென்னத் தேகாதி யியைந்த கோச மயமாக
கனமா நினைப்பு மறப்பாகிக் கலக்கு மாயைத் திறமிதுவே. (கரு)

ஒருகாற் றேகந் தானென்னு மொருகாற் பொறியார் புலனென்னும்
ஒருகாற் புந்தி மனஞ்சித்த மொருகாற் புமாணுய் நிலையின்றி
ஒருகா லகத்தும் புறத்தும்விரிந் துண்மை நோக்கஞ் சிறிதின்றி
ஒருகா லன்றிப் பலகாலும் பிறந்து மிறந்து முழைக்குமதே. (கசு)

‡ காட்சி மெய்மை மோகத்தாற் கலங்கி யுயிர்க ளிச்சைவழி
தாட்சி யான சீவனெனத் தன்னை மதித்துத் தனையுணருஞ்
சூட்சி யின்றி மிகமெலிந்து துயர்கூர் பிறப்பி லுழல்கின்றூர்
மாட்சி யான தனதுண்மை மதித்திங் குணர்ந்தாற் பிறவாரே. (கஎ)

---

* தொம்பத லக்ஷியமாகிய கூடஸ்த பேரறிவினிடத்து ரச்சுவின் கண் உற்பன்னமாகும் சர்ப்பப் பிரமைபோலுண்டாகும் சங்கற்பம்.

† சத்தாசாமானியவடிவ சேதனத்தில் விவர்த்தமாய் விளேந்த.

‡ திரிசிய பதார்த்தங்களேச் சத்தியமென்று நினைக்குஞ் சித்த விருத்தியின் மயக்கத்தால்.

பிறப்போ டிறப்பென் றுரைக்கின்ற பேத மெல்லா மனத்தளவாஞ்
சிறக்கும் பரம நிலைமாறித் திரிந்து பலவாப் பிரித்துணரும்
மறப்பில் விளைந்த சகமோக மாற்றுஞ் சுருதி குருவருளால்
திறக்கு ஞானக் கண்கொண்டு ஜெகத்தை நோக்கிச் சுகிப்போமே.()

பிறப்பு மிறப்பு முத்தேகம் பெற்ற தன்றே பொர்தாகிச்
சிறக்கும் பிரமந் தானானாற் செறியும் பிறவி யுளதாமோ
மறக்கு மஞ்ஞா னத்தாலே மயங்கு முலக நிலைகண்டு
நிறக்கும் பரிபூ ரணமாக நிலவு சாட்சி யாநிகழ்வோம். (௧௧)

சங்கற் பந்தான் பிறந்திறந்து சரிக்கு முடலா யுயிராகி
இங்ஙன் புலனும் பொறிகரண மெல்லா மாகித் தொழில் புரியுந்
தங்கும் பரம சிவன்முதலாத் தானே யெல்லா மசைப்பிக்கும்
எங்குநிறைந்த பரம்பொருடா னென்று மசைவில் சாட்சியதே.(௨௦)

சருவ சாட்சி யாநிறைந்து தமைத்தா முணாந்த பஞ்சகர்த்தர்
மருவும் பஞ்ச கிர்த்தியங்கள் வளர்ந்து மேன்மேன் மாறிவரும்
உருவ நாம சங்கற்ப முளதாந் தோற்ற மாத்திரமே
திருகொன் றில்லாச் சிவபுரணந் தெரிவா யென்று மசை விலதே.()

சிதாகா யந்தன் சத்தியினாற் றிகழ்ந்த சலனஞ் சித்தமதாம்
விதாவி தஞ்சே ருடலவத்தை மேவு கால மும்மூன்றாய்
இதாவி தங்கூர் பலபேத மிசைந்த சீவ வடிவாகி
சதானந் தமதாந் தனதுண்மை மறந்தே யுலகிற் சரிக்குமதே. (௨௨)

தேகந் தாமா யுணர்மயக்கஞ் செறிந்து வளர்ந்து வாசனையால்
சோக மடைந்த சீவாத்மா துயர்கூர் சங்கற் பத்துளதாம்
ஆக மூன்றுந் தாமென்ன வநுசந் தித்தே வேற்றுருவா
மோக மடைதற் கஞ்ஞான மூல மாமென் றுணர்வோமே. (௨௩)

தம்மைத் தாமே யறியாமற் றாமே தேடித் தளர்சீவர்
* மும்மைத் திறத்துஞ் சாட்சியதா முதிர்பே ரறிவென் றுணராமே
அம்மை வினையால் வளர்கோச மைந்தா கியநீ டளைபூண்டே
எம்மை யாள்வா ரிலையென்ன விளைத்துப் புலம்பு மியல்பிதுவே. ()

* ஜாக்கிர சொப்பன சுழுப்தியாகிய மூன்றிற்கும் விலக்ஷண மாயிருந்துணரும் பேரறிவு.

தன்னூர் விட்டு வழிதப்பித் தடுமாற் றங்கொண் டுழல்பதிகன்
என்னூர் காட்டி வாழ்விப்பார் யாரே யென்னத் தளர்போதில்
முன்னூ ரதுநீ முளைத்தவூர் மோக மகலக் காண்கென்று
மன்னூர் காட்டி யருள்குரவன் வழியே சென்று வாழ்வானே.(உரு)

அனைய பிரமம் பூரணமா யசைவற் றகண்ட சாட்சியதாம்
இனைய பிரம சங்கற்ப மியைந்த பெயரே சிவனுதும்
புனையுஞ் சங்கத் பத்தியங்கும் புவன மெல்லாஞ் சிவமயமாம்
நினையத் தகுமெய் யுணர்வுடையோர் நிறைந்து குளிர்ந்த மதியாலே.

முத்த ருள்ளஞ் சிவமயமா மோகஞ் சற்று மிலதாகும்
பற்றும் பாச விலக்ஷணமாப் பரமா னந்த வடிவாகுஞ்
சுற்று முலக ஜாலமெலாஞ் சொருப மென்னக் கண்டுணர்ந்து
சித்த சலனஞ் சற்றுமுறுர் செறிந்து சர்வ மாத்திகழ்வார். (உஎ)

தனதா ரொளியை யெனக்கருளித் தானுக் கியசற் குருநாதன்
எனதா ருயிரு முடல்பொருளு மெல்லாந் தானு முண்மைநிலை
இனதா மென்னக் காட்டியபின் னெனையுங் காணே னீதென்னே
மனதால் விளைந்த மாயையென மதித்தே யெல்லா மானேனே.(உஅ)

எல்லாந் தாமாய் நிகழ்முத்த ரேதுக் காசைப் படுவார்கள்
சொல்லா லன்றி மனத்தாலுஞ் சுருதி யாலு நன்குணர்ந்த
நல்லார்க் கெல்லா முடைமையினுல் நாளுஞ் சமமாச் சுகித்திருப்பர்
நில்லா மாயா தோற்றமெனு நிலைகண் டியாவு மாய்நிகழ்வார். (உகூ)

தம்மைத் தம்மா லுணர்பெரியோர் தமதா ரொளியே துணையாக
* மும்மைத் திறத்துங் கண்டுணர்ந்து முதிய பிரபோத நிலைநிற்பார்
இம்மைச் செயல்க ளெல்லாந்தா மியக்குஞ் சித்தி யெனக்கண்டு
செம்மைச் சுகவா ரிதிதிளைத்துத் தியக்க மின்றி யிருப்பாரே. (ௌ௦)

தோற்றுஞ் சீவேஸ் வரசகத்தைச் சோதித் துணர்ந்த பெரியோர்கள்
சாற்றும் பரம சித்தினிடைச் சார்ந்த மாயா விசித்ரமெனத்
தோற்றுஞ் சுருதி குருவாக்காற் றெளிந்து தமது சிற்சொருபம்
போற்றும் புரண வடிவென்னப் புந்தி யாறிச் சுகித்திருப்பார்.(ௌக)

---

* முக்காலத்திலும் பாதிக்கப்படாத சத்வடிவமாக அபரோக்ஷ வாயிலாய் உணர்ந்து.

தானும் பரம சத்தியினாற் சமைந்த லீலா சங்கற்பம்
வானாய் வளியா யனனீராய் வயங்கு மண்ணாய் வளர்ந்தோங்கும்
ஊனா யுயிராய்ப் பலகோடி யுறுசங் கமதா வரமாகி
ஆனா விளையாட் டுறினுலகை மறியா தவல முறலென்னே. (௩௨)

ஒன்றாய் விகற்ப மிலாவறிவா யுளதா மந்தச் சித்தினது
நன்றாஞ் சத்ய சங்கற்பத் தாலே நணுகுஞ் ஜகசிருட்டி
அன்றா ரோப மோகமதி லணுகுஞ் சீவ சங்கற்பந்
துன்றார் விடய வறிவதனாற் றொடரும் வினையாற் றுன்புறுமே. ()

அதுநா னானா லதற்குள்ள வனந்த சத்தி யெனக்கெங்கே
இதுநன் குணரப் புகலுமெனி லிருந்த தொன்றே நீவேறாய்
வதிந்த தென்று மிலையதுவாய் வயங்கு புரண சிற்சொருபம்
பொதிந்த நானா வடிவாகிப் புரியும் பலசித் தியுநினதே. (௩௪)

அதுவோ நானே நானதுவோ அதுநா னானா லதற்குள்ள
திதமாஞ் சச்சி தானந்தச் சீர்மை யெனக்கிங் குளதாமோ
சதமா யெங்கு நிறைநினது சத்தாந் தன்மை யுண்ணோக்கால்
விதமாம் புறச்சங் கற்பமெலாம் விடுத்தா லதுநீ யாவாயே. (௩௫)

நிறைவாம் நினது சிற்சொருப நிலையை மறந்து வெளிநோக்காற்
சிறிதாய்த் தோன்றி மறைகின்ற தேகந் தானா மயல்கொண்டு
அறியா மையினாற் படுந்துயர மகலப் புரண மேனோக்கால்
* புறனும் விடய தோற்றமெலாம் போக்கி லதுநீ யாவாயே. (௩௬)

தனைத்தன் றேகத் தளவாகச் சத்திய மாக்கொண் டெதிர்தோன்றும்
அனைத்தும் வெவ்வே றாக்கண்டே யணுகு மஞ்ஞா னத்தாலே
இனைவி லுண்மை மறந்ததனா லிடையாஞ் சிற்றின் பத்துழன்று
நினைவில் சிறந்த பேரின்ப நிலைகா ணாமன் றயர்வாரே. (௩௭)

---

* சங்கற்ப வடிவாய்ப் பரிணமிக்கும் ஆகாரம் தவிர்ந்து சங்கற்பங்களை விளக்கிவைக்கும் விளக்கமயமாய் அந்தக்கரண விருத்தியைப் பரிணமிக்கச்செய்து தைலதாரைபோல்நின்று பழகில் திருசிய விளக்கம் நீங்கித் திருக்குமாத்திரமாய் நிலைபெறும்.

சத்தி னுண்மை நன்ருகச் சங்கை தீர வுணர்த்திடினே
முற்றுந் தானாய் முளைக்கின்ற மோகத் தோற்ற ஜகமாய
பற்ருென் றின்றிக் காண்பானும் பரவு காட்சிப் பொருளிடையில்
சித்த மாக நடுநின்று திகழ்ஞா னமதாந் தெரிவாமே. (ந அ)

சித்தின் விலாச நன்ருகத் தெளிய வேண்டிற் றிரணமுதல்
வித்தி னுள்ளும் பிரமன்முதல் விரிந்த சீவ கோடிகளும்
தத்தன் னிலையில் வளர்ந்தோங்கிச் சராச ரங்க ளாய்நிறைந்த
அத்த னுண்மை கண்டுமனத் தனந்தா னந்த மடைவாமே. (ந க)

சற்சின் மயமாந் தனதுண்மை சங்கை தீரச் சார்வதற்குத்
துச்ச வுலகா யுயிராகித் தொடர்கா ரணமாத் தோன்றிநின்ற
விச்சை வடிவாந் தனதறிவின் விரிந்த விலாச மெனக்கருதி
நிச்ச யித்துப் பேரின்ப நிறைவா முண்மை காண்போமே. (சo)

அன்று துக்க சடவனித்த மாய சகத்தோற் றமெல்லாம்
பொன்ற வனந்தா னந்தமயப் புரண சொருப மேயாவாய்
நின்ற நினது சித்துருவ நிகழ்வி னுள்ளே யெல்லாமாய்
ஒன்றி மாகர்த் தனுமாகி யுண்மை நோக்கி னிகழ்வாயே. (சக)

உலக ஜாலத் துறுகின்ற வுயிர்க ளுணர்வின் மையினுலே
அலகில் துன்ப சாகரத்தி லழுந்தி மயங்கு மவசத்தால்
இலகு சிற்றின் பமதாகி யிடையிற் ருேன்று மொழிவதனை
நிலனிற் பெறுபே ரின்பமென நினைந்து பிறப்பிற் றளர்வாரே. (சஉ)

நனவிற் கனவிற் சுமந்துழலும் நானு பார விவகாரம்
நினைவில் சுழுப்தி யிடையாற்றி நெடிய வினையால் விளைகின்ற
அனைய சுமையை நாடோறு மாசை வழியே சுமைப்பித்திங்
கினைய வருத்துந் தெய்வத்தை யிகழ்ந்தா லீட்டும் வினையறுமோ. ()

அறிவின் மையிற்சேர் வினைவிளைக்கு மனந்த பேத சுகதுக்கந்
தெரிய வேண்டிற் றிரணமுதற் றேவ ருரகர் நரர்முதலா
விரியுந் தார தம்மியமா மேவுஞ் ஜெனன பாரத்தை
நெறியே யாற்றி மாற்றினலால் நிலனில் யாவர் சுமப்பாரே. (சச)

வினைக்கீ டாய பலஜென்மம் வெவ்வே றமைத்து விளையாடும்
அனைய பிரம மொன்றுயு மதன்சத் தியிற்சேர் சகத்துயிர்கள்
தனைத்தான் வெவ்வே றுமதித்துச் சாரு மகம்பா வனையாலே
நினைத்தற் கரிய துயருழந்தால் நிலையாம் பிரமச் செயலாமோ. (சரு)

அருக்கன் போலும் பரப்பிரம மசைவற் றிருக்கச் சகத்தொழில்கள்
திருத்த மாக நடப்பதுபோற் ஜெகத்திற் றோன்று முயிர்வினையால்
வருத்தும் பேதப் பலபிறவி மாறி மாறி வருவதலால்
ஒருத்தன் பாடா மெனக்கருதி லுணர்வில் சடமா முயிர்க்குலமே. ()

ஆஸ்தி கன்போ னுஸ்திகனு மத்வை தனைப்போற் றுவைதர்களும்
வாஸ்த மாக யானைகண்ட மயக்கத் துரைக்கு மந்தகர்போல்
சாஸ்தி ரங்கள் வெவ்வேருச் சாதித் துரைக்கும் வழக்கெல்லாம்
பூஸ்தி ரத்திற் புணர்மாயைப் பொருளென் பதனை விரித்துரைப்பாம்.

ஒன்றே மூலப் பொருளென்னி லுணர்வோ னெருவ னுளனுமே
அன்றே மூல மில்லையெனி லவனு ருளனே விலனுமோ
நின்றே தோன்று முலகமிலை நிறைந்த பிரம முளதெனினுஞ்
சென்றே விளைந்த திரிபுடியாய்த் திகழ்ந்த விடய வறிவாமே. (சஅ)

கருவிற் சிசுவிற் குழவியினிற் கதித்த மதலைப் பருவத்தில்
மருவிப் படர்ந்த பகுத்தறிவு வயங்கு மத்திய பருவத்தில்
தருவித் தரமாய் விளங்குலகிற் சார்ந்த பலவா சனையாலே
வருமிப் பலபா வனையறிவை வயங்கக் காணுமறிவறிவே. (சகு)

தானே தானுத் திகழறிவே சர்வார்த் தத்தின் றூரகமாம்
வானே யசைய மனமாகி வளர்சிற் றறிவாய்ப் பலவடிவாய்
வானே முதல வைம்பூத வயமாத் தார தம்மியமாத்
தானே தோன்றி விளையாடித் தானே கண்டு மகிழ்தருமே. (ருo)

வேறு.

பகுத்த்றி வுடைய மாந்தர் பரம மெய்ஞ் ஞானமின்றி
வகுத்ததந் தெய்வ முண்மை மற்றவை யசத்ய மென்ன
மிகுத்தவா தங்கள் செய்து வீந்திடல் நிலத் தெறும்பு
தொகுத்தவர் வழக்குக் காகத் தொடர்யுத்தஞ் செய்தல் போலாம். ()

வேறு.

காணு மறிவே நீயென்றுங் காட்டு மறிவே யாமென்றும்
பூணு மாறிங் கெடுத்துணர்த்தும் பொருவில் விசிட்டாத் வைதர்தரும்
நாணி வேறாய் நோக்காத நலங்கூர் ஞானக் கண்கொண்டு
சேணின் றொளிருங் கதிர்போலத் திகழ்ந்தொன் றாகச் சுகிப்போமே.

ஒன்றாஞ் சத்தின் சித்தினிடத் துண்டாஞ் சித்தஞ் சகமாகி
நன்றே பலவாய் விரிகின்ற நானு நாம ரூபமொடு
துன்று ரோபப் பதிபலனந் தோன்ற வதனைச் சத்தியமாச்
சென்று தரித்துத் தாழாமே திகழ்மே னேக்கிற் சுகிப்போமே. ()

* சித்த மிதயாம் பரத்திடையே திகழ நேய நிட்டை பெறும்
அத்தன் னிலையி லானந்த வகண்டா கார வடிவாவாஞ்
சுத்த மாய சிதாகாயத் தொடர்பாய் நின்ற சாதகத்தால்
நித்த மான நிலைமேவி நிறைநீ ளுலகிற் சுகிப்போமே. (௩௪)

பூதா காய மனுகாயம் பொருவில் சிதாகா யமதாக
ஓதா காய மூன்றி னிடத் துணர்வா கியஞா னுகாயம
வேதா திகளால் விளக்கியவா விரிந்தெல் லாமாய் நிறைந்தாலும்
† போதா நின்ற திரிபுடியி னடுவாக் கண்டு புணர்வோமே. (௩௫)

---

* அந்தக்கரண விருத்தி இருதயாகாசத்தின்கண் புத்தி பூர்வகமாக விசாரவாயிலாய் சற்குரு கிருபையால் நிலைபெற ஆண்டு நிகழும் சூன்யப் பிரதீதிமயமாய் ஆகாது. அச்சூன்யத்தை அறியும் திருஷ்டா வடிவாய் இருக்கில் நனவிற் சுழுப்தி ஆநந்த நிலையாகிய சொருப சமாதியாம்

† சங்கற்பம், ஞேயம், சங்கற்பத்தை அறியும் அறிவு ஞாதா— சங்கற்பத்தை விளக்கிவைக்கும் பிரகாசம், ஞானம் இவை ஈண்டு திரிபுடியாம். இதில் சங்கற்பத்தையும் அதை அறியும் உணர்ச்சியையும் விடுத்து, சங்கற்பத்தை விளக்கிவைக்கும் பிரகாசத்தைச் சூக்ஷ்ம திருஷ்டியால் யூகித்து ஆண்டே சித்தவிருத்தி நிலைபெற்றிருக்குமாறு பழகுவோம்.

அகம் விருத்தி யாற்றோன் று மறிவான் விடய மெனவிரண்டின்
புகல வொண்ணுச் சிவானந்தம் புரணமா யொன்றாய் நிற்கும்
சகமா நானு பேதமதாச் சார்ந்து மாயும் விடயசுகம்
நிகரில் பிரமச் சாயையதா நிகழ்தல் கண்டு சுகிப்போமே. (ருசு)

காண்பா னுயுங் காண்பனவு மாகிக் கலங்கா மெய்ஞ்ஞானம்
எண்பா வனைகட் கெட்டாதா யிருந்து நிறைந்த பொருளாகும் [னம்
* மாண்பாய்க் காணும் பொருள்விட்டு மற்றோர் பொருளை நாடுமு
வீண்பா வனை தீர் மெய்யறிவா மென்ன வாறிச் சுகிப்போமே (ருஎ)

காண்பா னென்றை மற்றென்றாக் கருதி மறந்து நினைக்கின்ற
வீண்பா வனையா மவத்தைகளை மேவிச் சுழலுஞ் சிதாபாசன்
பூண்பா வனையிற் றோன்றுபொருள் பொருந்து காட்சி மித்தையதாம்
† எண்பா வனை தீர் முதலொளியை யிதயத் தூன்றிச் சுகிப்போமே.

அறிவா னறியும் பொருளினிடை யணுகுமறிவா னந்தமதே
பிறியாதொன்றா யெங்குநிறை பிரமா னந்த லேசமதாஞ் [யை
சிறிதா முயிர்க டொறுமெனதியா னென்னச் செறிந்த பேரொளி
‡ நெறியே நாடிச் சிந்தித்து நிறைபே ரின்ப மடைவோமே. (ருக)

---

* நவநவமாய்க் காணும் சங்கல்பங்களை விடுத்து அடுத்த சங்கற்பங்களைப் பற்றுவதற்கு முன்னர் நாமரூப நாட்டமற்று சத்தா சமான்யமாய் விளங்கும் எதார்த்தவடிவாய்ச் சித்த விருத்தியைச் செலுத்தி ஆண்டு நிகழும் அறிதுயிலாகிய சமாதி ஸ்திதியினை அடைவோமே.

† பெருமை பொருந்திய ஏகபாவனை பெற்றிருத்தலாகிய பாவனையும் நீங்கி பாவனுதீதமாய்ச் சர்வத்திற்கும் தாரகமாயுள்ள சுயம்பிரகாசத்தை இருதயாம்பரத்தில் அந்தக்கரண விருத்தி நிலைபெற்றிருக்கப் பழகும் பழக்க மேலீட்டால், தனது சொருப ஸ்திதியை அபரோக்ஷ வாயிலாயுணர்ந்து அறிதுயிலைச் செய்வோமாக

‡ தத்துவமசி வாக்கியப் பொருளைக் குருமூலமாக உபதேச வாயிலாய் உணர்ந்து அகம் பிரஹ்மாஸ்மி யென்னும் பொருளின் வழியே மனதைச் செலுத்தி, சாதக பாதகயுத்தியால் சிந்தனஞ்செய்து அச்சிந்தனுதீதத்தில் விளங்கும் நிரதிசயாநந்தவடிவா யிருப்போம்.

இதயாம் பரத்தி லுதித்தொளிரு மிணையி லாத்ம தேவதையைத்
திதமா நோக்கிச் சிந்தித்துத் தெளிந்தே காக்ர சித்தமொடும்
விதமார் நானு தோற்றமெலாம் விரிந்த தனது லீலையதாச்
சதமாக் கண்டு கலங்காத தனிவாழ் வதனிற் சுகிப்போமே. (சுo)

அறிவிற் சமபா வனை மேவி னமலா நந்த சித்தியதாங்
குறிதீர் தனதுண் மையை நாடிக் கொண்டு சகத்தை நோக்குங்கால்
பிறிதோர் பொருளும் வேறுகப் பிறங்கா வநுபூ தியினலே
வறிதே தோன்று மவித்தைகெட வளர்பே ரின்ப மடைவோமே. ()

சகல வுயிரி னிடத்திருந்து தானே சரிக்கு மியன்மறந்தே
அகலித் தேகத் தளவாக வறியா மையினுற் றளர்மயக்கில்
புகலுற் றணந்த பேதமதாப் பொருந்து ஜால சங்கற்பம்
மிகலுற் றிடரின் மூழ்காமே மெய்யா ருணர்விற் சுகிப்போமே. ()

பொன்னைப் பலவாமுருவாகப் புணர்த்தி விருப்பு வெறுப்புறல்போல்
தன்னைத் தானே வெவ்வேறுச் சமைத்துக் கண்டு விளையாடும்
என்னைத் தேகத் தளவாக வெண்ணு மோக மொழிவதனுல்
முன்னைப் பரிபூ ரணநிலையில் முத்தி யடைந்து சுகிப்போமே. (சுங)

இடையொன் றின்றி யெங்குநிறை யெனதா ரொளியின் மிளிர்கின்ற
விடய மான தேகாதி விரிந்த வண்டப் பரப்பெல்லாந்
திடமா ரெனது சங்கற்பச் சித்தி ரத்திற் றேன்றிமறை
சடமார் லீலா பிம்பமெனச் சாட்சி யாகச் சுகிப்போமே. (சுச)

எங்கும் யாமே நின்றேளிரு மியல்பை நன்கு விரித்துரைக்கில்
தங்குந் தூல விடயமதைச் சரிக்குங் கன்மேந் தியத்தாலும்
இங்குத் தூரத் துளபொருளை யிலகு ஞானேந் தியத்தாலும்
மங்குன் மறைந்த பொருளெல்லா மனனத் தாலுந் தீண்டுதலால். ()

இயாமே விபுவாம வியாபியுமா மெம்மை யளக்குங் கருவியிலை
இயாமே யெம்மை மதித்துணரு மேக சற்சிற் சொருபமதாம்
இயாமே யெம்முள் விளையாடு மிந்த வனந்தா னந்தக்கூத்
தியாமே கண்டு நிரந்தரமா மகண்ட வாழ்விற் சுகிப்போமே. (சுசு)

அணுவுக் கணுவா யெங்குநிறை யாமே யஷ்ட மூர்த்தமதாங்
கணித மிறந்த வெல்லைநிறை கருத்தா வாகி யாங்காங்கும்
நணுகு நாம ரூபமதாம் நானு பொருளி னுட்புறனும்
மணியி னொளிபோ லெமைக்கண்டு மாறு வாழ்விற் சுகிப்போமே.()

இவ்வா றமர்ந்த வெனதொளியை யிரவி முதலா மெப்பொருட்குந்
தவ்வா மூலப் பேரொளியாத் தழைந்தெல் லாமா நிறைந்தமையால்
அவ்வா னெடுந் தூ ரத்ததனை யளாவி நோக்குங் கட்புலனால்
செவ்வே நின்றிங் குணர்ந்தெங்குந் திகழு மெம்மூட் சுகிப்போமே.()

விடய நோக்கா லெல்லா துண்மை வெளியா காது நெடுங்காலம்
மடமை யாலே பிறந்திறந்து மகிமா யையிலே சுழன்றிளைத்துத்
திடமார் ஞானக் குருவருளாற் சித்தந் தெளிந்து மேனோக்கிப்
புடமா யெனையான் பெற்றதனாற் புரண வாழ்விற் சுகிப்போமே. ()

இங்கித் தேகத் திடையன்றி யெங்கெங் கிருந்து மெனைநோக்கில்
அங்கங் கியானே முதலாக வனைத்தி னுள்ளும் புறத்து நிகழ்த்
துங்கச் சற்சின் மயமாகத் தொடர்பே ரின்ப நிறைதலினால்
சங்கை யின்றிச் சர்வார்த்த சாட்சி யாகச் சுகிப்போமே. (எ0)

சாத்தி ரங்கள் யாவற்றின் சாரமான வெமைப் பெற்றோந்
தோற்று முலக ஜாலத்திற் சூழ்ந்த விநோதா டம்பரத்தின்
சூத்தி ரம்யா மெனவறிந்து தொடருந் தியான சமாதியதாப்
போற்று மெம்மை யெம்முள்ளே பூஜித்தினிது சுகிப்போமே. (எக)

அறிவா னந்தப் பெருவெளியா வமர்ந்த வெனையான் பூஜிக்கச்
சிறிதா மலர்நீர் முதலாய திரவி யம்போ தாமையினால்
நெறியா ரிதய மறிவுசம சந்தோ டமதா நிறைமலரால்
குறிவே றறநின் றெனைநோச்கி குளிர்பூ ஜனையாற் சுகிப்போமே.()

தேகத் தளவா யெனைக்கண்டு திகைத்த காலத் தெனதுநிலை
மோகத் தாலே மறைந்தருள்கூர் முதல்வன் குருவாய் முன்னின்று
சோகந் தீர வெனைத்தானுந் துரிய நிலையிற் கூட்டியதால்
தாகந் தீரக் குளிர்ந்துள்ளே சமபா வனையாற் சுகிப்போமே. (எ௩)

தனதா ரொளியின் விலாசத்தைச் சங்கை தீரக் கண்டசுகர்
கனதா கமதா மாயைமயல் கடந்து சனகன் மொழிவழியே
மனசால் விளைந்த விடயசுக மதிப்பி வாதெல் லாமொழித்துப்
பினத' கமிலாப் பெருவெளியிற் பிறங்கல் போலச் சுகிப்போமே. ()

சகஜ நிலையைச் சார்ந்துண்மை சாதித் தற்கிங் கமையுமதோ
தகுமுத் தியினுற் சாற்றுமெனிற் சற்சின் மயமாஞ் சர்வார்த்த
மிகுமா மகத்தா மரசாட்சி மிளிர்மா போகப் பேரின்பஞ்
சுகமாய் நின்று சாட்சியதாத் தொடர்பொன் றின்றிச் சுகிப்போமே.

தொடர்பொன் றின்றி யெனப்புகன்ற சொல்லின் பொருளை விரித்துரைக்கில், இடர்தீர் பாமே யொருமுதலா யிரண்டாம் பாகஸ் தருமிலனும், அடர்பே ருருவ மொடுதிகழு மனந்த கோடி சித்தி ரங்கள், திடமா யென்னுட் டோன்றிடினுஞ் சிதைவில் படம்போற் சுகிப்போமே. (எசு)

ஈசன் முதலா யெப்பொருளி னிடத்துஞ் சற்சின் மயமாக
வாச மாகு மென்னிடத்தே வயங்கா ருயிர்யான் யானென்னப்
பேசு மல்லால் வேறாகப் பிரித்துக் கூறற் கிடமுண்டோ
நேச மாகு மென்சார்பால் நிகழுஞ் சர்வ மாச்சுகிப்போம் (எஎ)

ஒன்றே பலவாப் பிரிந்தனந்த வுருவ நாம மொடுவிளங்கி
நின்றே மறைந்து தோன்றிவளர் நிலைமா றுது பரம்பரையில்
நன்றே புணர்ந்த சங்கற்ப நயந்து திருக்கூத் தாடறனை
இன்றே யென்னுட் கண்டுமகிழ்ந் திணையில் வாழ்விற் சுகிப்போமே.

தன்னைத் தானே வேறாகத் தகைந்து தேடும் பாவனையால்
பின்ன மில்லா வருள்வெளியைப் பிரிந்தே னென்று பலபிதற்றும்
முன்னை வினையி னொழிவதனுல் முன்னின் றருளும் குருவாக்கால்
மன்னு நிலையிற் பவமொழிந்து மயலற் றொன்றாச் சுகிப்போமே. (எசு)

கால தேச வஸ்துவெனக் கருதும் பாவா தீதமதாய்
மூல மாகி யாதியந்த முளைத்தல் வளர்த லுசமுறல்
தூல சூக்க காரணமாத் தொடர்பே ருருவ மிலாதுளதாம்
நாலு வேதப் பொருளான நமைநாங் கண்டு சுகிப்போமே. (அ०)

சத்துச் சித்தா னந்தமதாந் தனியா ரகண்டப் பெருவெளியில் [லாஞ்
வித்தின் மரம்போன் மணியொளிபோல் விரிந்த புவனப் பரப்பெல்
சுத்தத் துண்டாய் விரிந்தொடுங்குஞ் செயலை நோக்கிச் சலனமலா
முத்தி பெறுமித் தேசமொடு முழுதுங் கண்டு சுகிப்போமே (அக)

என்றுஞ் சலன மறுசாட்சி யெனவே நிறையென் சந்நிதியில்
துன்று பலசங் கற்பமதாத் தொடருஞ் சித்தத் துண்டாகி
நின்று விளங்கி மென்மேலு நிகழும் சகசித் திரங்களெலாம்
நன்று நோக்கி யருள்வெளியே நாட்ட மாகச் சுகிப்போமே. (அஉ)

இல்லை யிருந்தாற் காணேமோ வென்பார் மயலை நீக்குதற்கே
நல்லோர் மொழியுஞ் சுருதியுத்தி யாலே நணுகு மநுபவத்தால்
எல்லோ ருள்ளத் தினுநிறைந்த வெனது சாட்சி சாட்சியதாச்
சொல்லால் விளக்கி னேமல்லாற் சும்மா யிருந்தே சுகிப்போமே. ()

காணே மில்லை யென்பாரைக் கண்டே யெமது புரணநிலை
ஏணார் கருவி யுடன்கூடி யிங்ங னெவருந் தெளிந்துய்ய
மாணார் விருத்தி கொடுபலவும் வகுத்துக் கூறி னேமல்லால்
வீணே யுழைக்கு மறிவிலர்போல் வினைய மின்றிச் சுகிப்போமே.()

சங்கற் பத்தால் வேறுகச் சார்ந்த பொருளைக் கண்டிருந்தும்
இங் தத் தம்மைக் காணேமென் றிசைப்பார் காட்டின் தனைக்காணார்
தங்கம் பணியா யிருந்திடவுந் தளர்ந்தே யிழந்தே மென்பார்போல்
எங்கு மிருந்து விளங்குமெமை யெம்முட் கண்டு சுகிப்போமே. ()

கனவு போல நன விடத்துங் கருது சங்கற் பத்தளவாய்
மனவா னகத்தே விரிந்தொளிரும் மகத்தாஞ் சகஜா லங்களெலாஞ்
சனன மரண மிலாவெம்மிற் சார்ந்து மறையுங் கற்பிதமாய்
அனக வறிவு சாட்சியதா யமர்ந்து கண்டு சுகிப்போமே. (அசா)

அத்தன் சித்தி விச்சைவழி யடைந்த வித்தே கம்பெறுமுன்
சுத்த மாய சிதாகாயத் தொடர்பா யென்று மழிவிலனும்
நித்த மாகு மென்னிடத்தே நிலவு சகத்தோற் றங்களெலாம்
பத்தி பாய்ந்து மறைந்திடினும் பவமற் றென்றிச் சுகிப்போமே. ()

பிறத்த லிறத்த லெனும்பான்மை பேத மான சிதாபாசன்
மறப்பில் விளைந்த மோகமலால் மாறாச் சுத்த நித்தநிறை
திறத்த ஞான காயமதாத் திகழ்வேம் வேறாந் திரிபுடியில்
நிறத்த காட்சி மாத்திரமா நிகழ்ந்து குளிர்ந்து சுகிப்போமே. (அஅ)

வேறு.

சந்தத மெம்மு ணீங்காத் தனியர சாட்சி பெற்றோம்
சிந்தனை யொன்று மின்றிச் சிதம்பர மாகி நின்றோம்
பந்தபா ரங்க ளெல்லாம் பரிசாலர் சுமந்த ளிக்கத்
தொந்த மொன் றின்றிநித்ய துரியவாழ் வதிற் சுகிப்போம். (அகூ)

வேறு.

என்னிற் றோன்றி யெனதேவ லாளா வெனது சந்நிதியில்
மன்னிச் சமட்டி வியட்டியதா மருவு மையேழ் தத்துவங்கள்
தன்னிற் சகல கேவலத்திற் சகஜ விநோத நடம்புரிந்து
மின்னின் மறைதல் சாட்சியதா மெம்முட் கண்டு சுகிப்போமே. ()

வேறு.

தன்மய மாக வெங்குஞ் சகஜநோக் கமையப் பெற்றால்
பன்மையா நாம ரூபம் பயப்பைய நீங்கிப் போகும்
புன்மையா மனோசங் கற்பம் பொருந்தாச் சலனந் தீர்ந்த
மின்மய மாஞ்சிற் சோதி வேறற விளங்கு மன்றே. (கூக)

வேறு.

மன்னுந் தனது லீலையதா மருவு மனந்த விநோதமதாத்
துன்னுஞ் சீவேஸ் வரசகமாத் தொடருஞ் சித்தி நடந்திடவும்
பின்னு முணர்வின் மையினாலே பேதசித்தி பெற வெண்ணும்
பன்னு மசுத்த வாதனை தீர் பரம நிலையிற் சுகிப்போமே. (கூஉ)

பரவியா பகத்தி லண்டமெலாம் பயிலும் பலபந் துகளாகத்
திரமார் பஞ்ச மூர்த்திகளுஞ் சேர்ந்து விளையா டரங்கத்தில்
தரமார் தேவர் நரருரகர் சார்ந்த நானா வுயிர்க்குலங்கள்
விரவும் லீலா பிம்பமதாம் விநோதங் கண்டு சுகிப்போமே. (கூங)

கால தேச வஸ்துவெனக் கருதா நின்ற பாவனையில்
ஞால மதனி வித்தேகம் நணுகு நிலையை நோக்குங்கால்
தூலஞ் சடமா மிந்தியங்கள் சூக்க மவத்தை களின்மாறும்
சால நுணித்தா முயிர்சரித்துச் சமித்தல் கண்டு சுகிப்போமே. (கச)

தூலம் வியஷ்டி சமஷ்டியதாய்ச் சூழ்ந்தே யெமதா டரங்கத்தில்
சால வெழுந்து பலவேடந் தரித்து விநோத வாடல்செயும்
மூல மான விந்தியங்கள் முதலா யூழி யூழிதொட்டு
ஞால மதனின் மாறுது நடித்தல் கண்டு சுகிப்போமே. (கரு)

தலையாம் புரண சிற்சபையிற் சமைந்து நடிக்கும் பலபிம்பம்
நிலையி லிவையொவ் வோர்முதலா நிகழ்தல் விநோத மாத்திரமே
அலைதீர் சகஜா னந்தமதா மமல நடன முன்னுேக்கிக்
கலையார் பொருள்யா மாய்நின்று கலங்கா நிலையிற் சுகிப்போமே. ()

சதானந் தமதாஞ் சிதம்பரத்திற் சமைந்த நடனஞ் சகஜமதாம்
நிதான மின்றி மோகமபி மானத் தாலே நிலைமாறி
விதாபிம் பமதாஞ் சிதாபாசன் மேவு நடன மித்தையதாம்
உதார வினையின் வழியூட்டு மூழி னிலையுட் காண்போமே. (கஎ)

இயக்குஞ் சத்தி மாத்திரமா யியைந்த புரண சங்கற்பம்
பயக்குஞ் சீவேஸ் வரசகமாப் பாவி யியங்குந் திரிசியமாம்
நயக்கு மித்தியா சங்கற்ப நயமில் சுகதுக் கங்கடரும்
வியக்கும் பரம பஞ்சகிர்த்தியம் விமலஞ் சுகாகா ரமதாமே. (கஅ)

சார்வ பௌமன் றன்னரசிற் சார்ந்த சீவ கோடியெலாம்
ஆர்ந்த நியதி வழியியங்க வவன்செங் கோலா லியக்குதல்போல்
நேர்ந்த சீவேஸ் வரசகந்தன் நியதி வழியே பரம்பரையாய்ப்
பூர்வா பூர்வ மாயியங்கிப் பொலித லெம்முட் காண்போமே. (கக)

இந்தப் பரமா னந்தநடத் தியலுஞ் சீவேஸ் வரசகங்கள்
அந்த முறுமோ வப்போதங் கனைய பிரமச் செயலெதுகாண்
முந்தும் விதையுண் மரம்போல முதலாங் கலையா தியசத்தை [தே.
அந்தக் கதிர்மா மணியொளிபோ லமைந்தொன் ஞய்நின் றிலங்கும

இந்தப் பரமா னந்தசதோ தயமா யிலங்கு பரஞ்சுடரில்
தொந்தித் திலகுஞ் சகத்தோற்றஞ் சூழ்ந்த கடலி லலையாதி
வந்து தோன்றி மறைந்திடல்போல் மாயா மனோமாத் திரமாகுஞ்
சிந்தித் திடுங்கால் விவர்த்தமதாந் திகழ்மா மறைவாக் கியமிதுவே. ()

இயக்கும் பொருளே யியல்பொருளா யியங்கு முருவ நாமமொடும்,
நயக்குங் கருத்தா கருமமதா நடைகொண் டொன்றோ டொன்று
புணர், பயக்கும் பலவாந் தொழிலாலே பண்பாஞ் சுகதுக் கத்தமிழ்
தல், வியக்கு விநோத விளையாட்டா விளங்க லெம்முட் காண்போமே.

விளக்கும் பொருளே விளங்குபொரு ளாகி விரிந்த சகத்தோற்றம்
அளக்க வொண்ணு வுருநாம மனேக மடைந்து தமைத்தாமே
கிளக்குந் திருசிய திருஷ்டாவாய்க் கிளரு மிச்சா சுகதுக்கந்
தளைக்கும் பாச வழிநடித்துத் தளர்த லெம்முட் காண்போமே. ()

சுகமே சுகியாச் சுகப்பொருளாத் தொடரு மனவா சகமுடலாம்
அகமே வியபா வனையாலே யணுகுந் தூல சூக்கமதாம்
நிகில புவன போகங்க ணெடிது புசித்து நிரந்தரமாச்
சகல மதனி னிறைந்திருத்தல் தளரா தெம்முட் காண்போமே. ()

அருட்போ தமதா நிறைந்திருந்தே யமல வநுபூ தியினுண்மை
திருத்த மாக விளங்குதற்கே சித்த மொருப்பட் டுறைத்ததலால்
மருட்கே வலமுஞ் சகலமும்போல் மாயா மோக மலாமையினல்
திருக்கோ டெநாந் திரிசியமுந் திகழ்த லெம்முட் காண்போமே. ()

சீவ போதம் போயருளார் சிவபோ தமதாத் திகழ்ந்திடலே
ஆவ நீரு முத்தியலா லணுகுஞ் சகல கேவலங்கள்
ஓவற் காமோ வுடலுளமட் டுதிக்குந் தத்வ சாட்சியதா
ஏவற் கரசா விருந்தென்று மிறவா தெம்மைக் காண்போமே. (கOசு)

அருட்போ தம்போய்ப் பரயோக மகலா னந்தா தீதத்தில்
இருட்போ தமதாஞ் சூனியமே யிசைக்கு நாஸ்தி கர்க்கிடமாந்
தெருட்போ தமதே சுத்தநித்த திறம்பாச் சத்ய சிதானந்தம்
அருட்பூ ரணமென் றெமையாமே யன்பா லென்றுங் காண்போமே.

தேகேந்திய ங்க டாமாகத் திகழுஞ் சீவ போதம்போய்
ஊகஞ் சுருதி குருவருளா லுண்மை யருட்போ தம்பெற்றேம்
சோகந் தீர்ந்தோஞ் சர்வார்த்த சொரூப மாகத் திகழ்கின்றேம்
ஆக மனந்தந் தோன்றிமறைந் தழித லனைத்துங் காண்போமே ()

எங்கும் யாமே யாவையுமா மியல்பை நன்கு விரித்துரைக்கில்
தங்குஞ் சச்சி தானந்த சாட்சி விவர்த்த மாஞ்சகத்தில்
அங்கங் கியாமே திரிபுடியா மறிவாய் நிறைந்த விலாசத்தைச்
சங்கித் திங்கே யிலையென்றற் சாற்றம் மொழிக்க ணுள்ளோமே.()

கால சத்தைக் கலாசத்தை வஸ்து சத்தை யெனக்கவின்கூர்
மூல சத்தா சாமான்ய முதலாம் நமது லீலையதாச்
சால வெழுந்த சகத்தோற்றச் சங்கே தமதாஞ் சாதுரியம்
ஓல மிடுநான் மறைக்குமுத லாயெங் கென்று முள்ளோமே. (கக௦)

சத்தா சாமா னியக்கோடி தானு மெனது சந்நிதியில்
வித்தாய்த் தோன்றுஞ் சிற்சத்தி விவித நானு சத்திகளின்
சித்தாம் பல்லா யிரக்கோடி திகாந்தத் துள்ள வண்டமெலாம்
முத்தா கார மாய்நின்று மோக மின்றிக் காண்போமே. (கக்க)

வேறு.

அண்டங்க ளனைத்தின் மூல மாகியே முடியி னின்று
விண்டவே தாக மங்கள் விளக்கவும் வேறு காது
கண்டமா ருயிர்க்குண் மாந்தர் கருத்தினுங் கணிக்க வொண்ணு
மண்டுபே ரறிவா யோங்கிச் சலித்திடா மனமா மன்றே. (கக௨)

சத்துச் சித்தா னந்தமதாஞ் சமமாய் விளங்கு பாஞ்சுடரில்
சத்துச் சித்தா னந்தமதாச் சமைந்த சீவேஸ் வரசகங்கள்
சத்துச் சித்தா னந்தமதாஞ் சகல விநோத நடம்புரிந்து
சத்துச் சித்தா னந்தமதாத் தழைத லென்றுங் காண்போமே. (கக௩)

சத்தே சித்தா யானந்தந் தானுய்ச் சிவமாய்ப் பரமாகி
நித்தா நித்த பூரணமா நிகழ்சர் வார்த்த தாரகமாய்
வித்தா ரமதாஞ் சகசீவ விவகா ரமதாய்ச் சலனந்தீர்
முத்தா கார மாய்நின்று முழுது நிகழ்தல் காண்போமே. (கக௪)

ஞானு கார மாய்நின் று நடிக்கு நமது லீலையினில்
ஞானு கார மாத்தோன் றி நடிக்குஞ் சீவேஸ் வரசகங்கள்
ஞானு கார மாய்நின் று நயக்கும் விநோத நடம்புரிந்து
ஞானு கார மாமெம்முள் நணுக லென் றுங் காண்போமே. (௧௧௫)

அறிவா னந்த விலாசமதா மழிவில் பதத்தில் யாமிருந்தே
அறிவா னந்த விலாசமதி லணுகுஞ் சீவேஸ் வரசகங்கள்
அறிவா னந்த சத்தியினு லனந்த விநோத நடம்புரிந்தே
அறிவா னந்த சத்தினிடத் தமர்த லென் றுங் காண்போமே. (௧௧௬)

வானே ஞான வானுகும் மனவான் பூத வானுகும்
தானே பஞ்ச மூர்த்திகளின் சத்தி சீவ சத்திகளாம்
தானே விவர்த்த முக்குணத்தின் சார்பாற் றேன் றி விரிகின் ற
வானே முதலா வைம்பூத மயமாத் தன்னுண் மகிழ்தருமே. (௧௧௭)

வேறு.

பூதசம் பந்த மாகிப் புரைபடு மிவ்வா காயம்
வாதமு மனலு நீரும் மண்ணுமாய் வளர்ந்து நீண்ட
வாதனை மருவி நின்ற மனுகாய மதனுட் டோன் றும்
ஆதியாஞ் சிதாகா யந்தா னனைத்திற்கு மூல மாமே. (௧௧௮)

தானே யானுய்ப் பற்பலவாச் சாருஞ் சீவ கோடிகளாத்
தானே சிவமா யைந்தொழிலாற் சாரும் பஞ்ச மூர்த்திகளாத்
தானே தனது சகசத்தின் சதுர்ப்பா டளவை காண்பதற்குத்
தானே யென்னுட் பிரியாது தழைந்து தானே மகிழ்தருமே. (௧௧௯)

வானுய் வளியா யனனீராய் வயங்கு மண்ணு மைம்பூதந்
தானுய் விளைந்து பரவெளியிற் சரிக்கு மிரவி மதிமுதலாம்
நானு வாய விளக்கொளியு நணுகிப் பிறங்கிவ் வண்டத்தில்
ஊனு ருடலிற் சிற்சுடரா யொளிர்தல் கண்டு மகிழ்வோமே. (௧௨௦)

திரண முதலாக் கற்பகமீ ருகத் திகழுந் தாவரமும்
தரமா றெறும்பு முதல்யானை யீருச் செறிந்த சங்கமமுஞ்
சிரமா தியபா தாந்தத்துந் திகழுஞ் சிருட்டி சமத்காரம்
வரமா நமது சிற்சத்தி மகாத்மியங் கண்டு மகிழ்வோமே. (௧௨௧)

சத்தம் பரிச முருவிரத கந்த தன்மாத் திரையான
சுத்த மான வைம்பூதந் தொடரும் பஞ்சீ கரணத்தால்
வைத்த சகமா யுயிராகி வருகா ரணமாய் வயங்குகின்ற
நித்த மான பரஞ்சுடரை நினைவுட் கண்டு மகிழ்வோமே. (கஉஉ)

வித்தி னுள்ளே நாளுவாய் விளங்கு மித்தழ்தண் டதிலிலைகள்
முத்து மடித்தண் டதிற்கிளைகள் முகிழ்பூ காய்கள் பலமாகி
வைத்த விதையு மதனுள்ளே மருவப் புரியுஞ் சமத்கார
வித்தைக் குரிய சிற்சத்தி வினையங் கண்டு மகிழ்வோமே. (கஉங)

அண்டப் பரப்பி லுதித்தொளிரு மனேக கோடி சீவருக்குள்
மண்டு தலைகீழ்த் தாவரமு மறிந்த தலையூர் வனநடப்ப
கொண்ட பட்சி விலங்குமச்சங் குலவு தலைமேன் மாந்தர்களும்
விண்ட வடிவம் வெவ்வேறும் விநோதங் கண்டு மகிழ்வோமே. ()

வித்தி னுள்ளும் வேர்வையினும் விளங்கு முட்டை கர்ப்பப்பை
இத்தன் மையயோ னியிலணுவா யிருந்து மச்சை யஸ்திநரம்
புய்த்த வுதிரந் தசைதோலு முடைய தனுவா யெழுவகையா
வைத்த தோற்ற மகாசத்தி மகிமை கண்டு மகிழ்வோமே. (கஉ௫)

நீரா தியபல் லுணவருந்தி நிலைபெற் றிருந்து நிகழுயிர்கள்
சீரா யொன்றுக் கொன்றுதவி யாகச் செறிந்து பரம்பரையாச்
சேரா நின்ற சுகதுக்கந் திளைத்துக் குலவி விளையாடல்
ஆரா வின்போ டியக்கின்ற வருட்சத் தியினால் மகிழ்வோமே. ()

அறிவிற் றூா தம்மியமா யடைந்த வுயிர்க்கு ளுயர்மாந்தர்
செறியிப் புவன போதமொடுஞ் சிறந்த பரபோ தத்தவராய்
நெறியிற் றிகழ்வே தாகமங்கள் நிலையே யொழுகி நிகழ்போகம்
குறியிற் றெளிரும் பரபோகங் கொள லுங் கண்டு மகிழ்வோமே. ()

தனதா ரருட்சத் தியினிடமாச் சாருந் தனுவா தியைவெறுத்து
மனமா தியதத் துவங்களெலா மாயா மயமா மசுத்தமெனக்
கனமா முண்மை காணாத கலக்கத் தாற்றூன் றனையிகழ்ந்து
பினமில் சகவியா பாரத்தைப் பிழைகூ றுதலும் பேதைமையே. ()

ஒன்றில் விளைந்த சகத்தோற்ற வுயிரோ டேனும் பலபொருளும்
நன்றி யோடு முறவாகி நயங்கொன் றுக்கொன் றுதவியதாக்
குன்று வருளோ டன்புமுதற் குணங்க ளோடும் வாழாமே
துன்றும் வினையாற் றுற்குணங்க டொடர்தல் கண்டுஞ் சுளியோமே.

சுத்த மசுத்தஞ் சுகாசுகமாத் தொடருஞ் சத்தா யசத்தாக
வித்தா ரமதாம் பலவிகற்ப விநோதப் படைப்பா மிச்சகத்தை
வைத்தார் வேறே யுளராளுல் மறித்து வெறுத்து விலக்கிடலாம்
நித்தா ரமதா நம்மாலே நிகழு மிவற்றின் மகிழ்வோமே. (கரு௦)

வகுப்பொன் ருய மாந்தருக்குள் வடிவம் வார்த்தை வெவ்வேருப்
பகுத்த மனமா தியவிருத்தி பலவாஞ் சிருட்டி சமத்காரம்
தொகுத்த தொழிலும் வினைவழியே தொடரும் பலவாந் தரமாக
மிகுத்த வருட்சத் தியின்பெருமை விளங்கக் கண்டு மகிழ்வோமே.

தனது சுகபோ தம்விடுத்துத் தானே யீட்டும் வல்வினையால்
மனது சலித்தே யான்படும்பா டியாவர் படுவ ரெனவருந்தி
எனது தேகம் பொய்யசுத்த மிதனுற் பயனின் றெனவிரங்கி
நினது நியதி மாற்றென்ருல் நேர்ந்த வினையார் நீக்குவரே. (கருஉ)

ஆக மாகி யாருயிரா யஞ்ஞா னமுஞா னமுமாகி
போக மாகிப் போகியுமாய்ப் பொருந்து சுகமுந் துக்கமுமாய்
ஏக மாகி யெல்லாமா யிருந்த நமது சிற்சொருபம்
சோக மடைதற் கஞ்ஞானந் துணையா வருதல் பேதைமையே. ()

யான்று னவனென் மூவிடமா யிசைக்க லாய தேதென்னில்
வான்றன் மூன்று யுபாதியினல் வயங்கு நிலைமை விளங்கிடவும்
ஊன்று னென்னு மாமாயை யொழியப் பிரித்திங் குரைத்திடினுஞ்
சான்று கியயா மென்றுமொன்ருய்ச் சகலா தார மானேமே. (கருச)

தனது சிருட்டி பரம்பரையே சதுரோ டியல வாண்பெண்ணு
மனதி னுச்சா கப்படியே வகுத்துப் புணர்ந்தே யுலகோங்க
நினதா ருட்சத் தியினிடமா நிகழு மிவற்றைப் பதித்திகழ்ந்து
கனதா கமொடுந் துறந்தெதனைக் காண வுடலை வெறுப்பாரே. ()

உணவைவெறுத்து முடைவெறுத்து முறுதாய் தந்தை முதல்வெறுத்
நணுகும் பலவாஞ் சுகங்களையு நாட லாகா தெனவெறுத்தும் [தும்
எணுமிவ் வுலக விசித்திரங்க ளினிதாக் கண்டு மகிழாமே
துணையொன் றின்றி வனத்தேகித் துயர்கூர் தவத்திற் பயனென்னே.

சங்க மடியா வாதனைதான் சனிக்கு மென்றே யேகாந்தப்
பங்க தான விடந்தேடிப் பற்றென் றின்றி யிருந்தாற்றான்
துங்கப் பரமா னந்தபதந் துன்ன லாமென் பாரதுதான்
எங்கெக் காலத் தெதைவிடுத்தே யேகாந் தத்தி லிருந்ததுவே. (கங எ)

சதானந் தமதாஞ் சர்வார்த்தச் சமான மில்லாச் செல்வமொடுந்
ததாகா ரமதாம் பெரும்பதத்தைச் சார வேண்டி மனோவாக்கு
உதார மான தேகமுத லுயர்தத் துவங்க டமையொறுக்கிப்
பதாதி யாகி யெவரெவற்றைப் பாலித் தலுக்குப் பரிகுவரே. (கங அ)

உயர்வொப் பில்லாச் சகலகலா ஞான கரமா மொருபுருடன்
அயர்வில் தனது வித்தைவலி யறிய வண்டாண் டம்பலவுஞ்
சயமா விளங்க விளக்கியதிற் சகசீ வர்களுந் தானாக
நயமாக் கண்டு மகிழ்வதனை நான்று னெனயாம் நலிவானேன். ()

முன்னும் பின்னு மில்லாது முளைத்து மறையு மிவ்வுடம்பை
மன்னுஞ் சதமா முதலென்ன மதித்து மனோபா வனையாலே
என்ன தியானென் றவாந்தரமா மிச்சா ராகத் துவேஷமொடுந்
தன்னைத் தானே மறந்துழைத்தல் சகஜ விநோத மிகவியப்பே. ()

சத்துச் சித்தா னந்தமதாத் தழைபே ரறிவின் சாயையதா
வித்தின் மரம்போல் விளங்குலகில் மேவு முயிர்க்கிங் குளவறிவு
வித்தா ரமதாம் விகற்பமுள வினைக்கீ டாகத் தோன்றிமறை
பெத்த மாய சிற்றறிவைப் பிரித்தே யறியு மறிவறிவே. (கசக)

அறிவே தன்னை யறியாதிங் கறிந்தே னிதனை யதை யறியேன்
சிறியே னென்னத் தனைத்தானே சின்ன பின்னப் பலபொருளா
வெறிதே பிரித்து வேறாக விநோதம் புரியுஞ் சிறுவரைப்போல்
குறியா ருருவ நாமமெலாங் கொடுத்துக் குலாவல் காண்போமே. ()

அறிவா னந்த மகாபுருஷ னமைந்த மனோவல் லாசத்தால்
சிறந்து சமமாய் விளையாடத் திகழ்மா புருட ரிலாமையினால்
நிறைந்த வருட்சத் தியினிடமா நிகழுஞ் சகசீ வரைப்படைத்தே
அரந்தை யின்றி விளையாடு மற்பு தங்கள் காண்போமே. (கசங)

தானே முதலாத் தனக்குமுதல் வேறன் றென்னச் சாற்றவந்த
ஞான கரமா நாயனார் நவைதீர் சங்கத் தலைவர்கண்முன்
ஊன ருடலூர் யாதென்ன வுரைத்தார் முப்பா ழப்பாற்பாழ்
ஆன லறிவா னந்தமுத லவராய் நின்ற தறிந்தோமே. (கசச)

தானே பலவாப் பதிபலித்துத் தமைத்தாம் வெவ்வே றுக்கருதி
தானே மறப்பா மாயைவழி சனன மரண சுகதுக்கந்
தானே கற்பித் துவந்தூழி சங்கே தமதா விளையாடல்
தானே கண்டு சலியாது சமமா நிகழ்த லற்புதமே. (கசரு)

பரம சத்தி யொடுநிகழ்ந்த பஞ்ச மூர்த்தி களைநாடி
விரத முதலா மகாதபங்கள் மேவி நெடுங்கா லம்வருந்தி
விரவு தேவர் நரருரகர் மிகுமா யுளும்பாக் கியம்விறலும்
பரவு முலகிற் பெற்றிருந்த பலசித் திகளு மறிவளவே. (கசசு)

அறிவெவ் வுயிர்க்கு முளவதனா லதனா லெல்லாம் பெறலாகும்
அறிவா கரமாந் தேவர்களா லளிக்கும் வரமுஞ் சித்திகளும்
அறிவு விளக்க மலால்வேறே யவரா லிவர்க்குக் கொடுப்பதிலை
அறிவு விளக்க மேமுத்தி சித்தி யனைத்து மறிவளவே. (கசஎ)

உலகில் விளையும் பலபொருளுக் குரிய சத்தி குணகுணங்கள்
நிலவு சிருட்டி காலமுதல் நெடுங்காற் றேடி யறிவாலே
பலவாஞ் செயற்கு முணவிற்கும் பகரும் பலவெந் திரங்களுக்கும்
அலகி லுயிர்கள் சுகித்தோங்கற் கறிவா தார மானதுவே. (கசஅ)

உலகப் படைப்பிற் றிகழறிவோ டுறுமாந் தர்கடாந் தமதுண்மை
நிலையை யடைந்து சுகித்திருக்கு நெறிகா ணுதிங் குழைத்தலினுஞ்
சலன மில்லாத் தாவரமுஞ் சரிக்கும் விலங்கு பறவைகள்போல்
உலவில் சகமா விநோதத்துக் குதவி யாதல் மிகநன்றே. (கசகூ)

சர்வம் பிரம மயமென்னச் சாற்று மகாவாக் கியப்படியே
சர்வம் நமது பாக்கியமாச் சமமாய்க் கண்டு சுகியாமே
சர்வ மனித்தஞ் சடந்துக்கஞ் சற்றும் பயனின் றெனவிகழ்ந்து
சர்வம் பிறவிக் கேதுவெனச் சங்கிப் பதனாற் பவமறுமோ. (களு0)

சிருட்டி திதிசங் காரமெனுஞ் சிற்சத் தியினீ டொழினடக்க
வருத்து மஞ்ஞா னத்தாலே வருமாந் தர்களாம் பெரும்பதுமை
மருவிப் பெருகித் தனதுமுதல் மறந்தே தாந்தா மொருமுதலாப்
பெருகும் பலவா தனையாலே பேதித் துழைத்தல் பேதைமையே. ()

படைப்பா மகாதப் பெருங்கடலிற் படர்ந்த குமிழி யெனுமாந்தர்
மடப்பா வனையால் யான்பிறந்தேன் வளர்ந்தேனுலேந்தே வரும்பிறவி
திடப்போதனையாற்றீர்ந்துமுத்தி சேர்ந்தேன்சும்மாவிருப்பனெனுங்
கடைப்பா டதனாற் பரங்கடலெக் காலங் கலங்கா நிலைபெறுமே. ()

அந்தச் சுகர்போ லுயர்வாம தேவர் வசிட்டர் வான்மீகர்
முந்து சனகா தியமுனிவர் முடிசூ டிராமர் முதலானோர்
சிந்தைக் கினிய பரமபதத் திருந்தே பஞ்ச கிர்த்தியங்கள்
விந்தை யாக நடப்பதலால் விலகிற் சகத்தோற் றரவிலதே. (களுந)

சூனி யத்துஞ் செகத்தோற்றந் தொடர்மா மகத்தாம் லீலையினும்
மானித் திருந்த சீவேசர் மற்றை யெவைக்குஞ் சாட்சியதா
மேனித் தியமா யிருந்தகலா விமல சத்தி யொடுநிகழ்ந்து
தானித் தனையுங் கண்டறிந்து சர்வார்த் தமுந்தா னனதுவே.(களுச)

செகத்தோற் றரவிற் காதிமுத லாகத் திகழ்ந்த பரமசிவன்
இகத்திற் சீவ கோடிகடா மெடுத்த சனன மோகமற
மிகுத்த கருணை யானல்வர் மெய்யார் வடிவா யவதரித்துத்
தொகுத்த வறுபான் மூவர்முதற் றொண்டர் தமைத்தா மாக்கினரே.

மறப்பா மபிமா னத்தாலே வளர்மா மோக மயக்கமலால்
சிறப்பாம் பரமப் பொருணிற்பத் திகழ்பா வனையாற் பலபிறவி
இறப்பாம் பந்த முத்தியெனல் இதய விகற்ப மாத்திரமாம்
பிறப்பா டகலத் தெளிதராலே பினமில் பரமப் பெரும்பேறே. ()

அகப்பற் றகலப் புறப்பற்ரு மனைத்தும் விடுத்த வன்பர்பலர்
சகத்திற் சகலத் தியாகிகளாச் சரித்தே முத்தி யடைந்தாலும்
இகத்திற் பொறியின் வயமாக வியலுஞ் சீவேஸ் வரநியதி
உகப்போ டுலகை விநோதமதா யுணர்வ தல்லா லொழியுமதோ. ()

பதமுத் திகளின் பரிசுரைக்கிற் பரம சங்கற் பாகரமாம்
விதமார் புவனங் களின்மேவும் விவித சீவ பாவனைபோல்
சதமாம் வினையின் வழிவந்த தார தம்ய சுகாசுகங்கள்
திதமாப் புசித்து மறைவதலாற் சித்திற் கயல்வே றிடமுண்டோ. ()

சாயுச் சியமாம் முத்திநிலை தன்னை நன்கு விளக்கிடினே
தூய பரம சிற்சுடரிற் றுலங்கு சீவேஸ் வரசகத்தை
மாய வித்தை யால்விரித்து மகிழும் நமது லீலையென
ஆயு மறிவாற் பகுத்துணர்ந்தே யருளார் வடிவா நிறைதரலே. ()

அணுவுக் கணுவாஞ் சிதாகாய மதுவே யிதயா காயமதா
நணுகும் பூதா காயமுதல் நவிலும் பஞ்ச பூதமதா
அணுகும் பஞ்சீ கரணத்தா லண்ட மாகிச் சராசரமாய்
எணுமெம் முள்ளத் தருள்வடிவா யிலங்க லன்பாற் காண்போமே.()

அறியா மையினுன் முன்செய்வினை யளவாந் தேக முறுமளவும்
பிறியா தியலும் பிராரத்த பேத நானு விவகாரம்
செறியா ரறிவாற் கண்டுசம சித்தத் தோடு நுகர்ந்திருந்து
நெறியா ரருட்பூ ரணநோக்கால் நிலனிற் பாரங் கழிப்போமே. ()

எது விதியே வரவேண்டு மதுவே வருக வில்வுடற்கு
எது நீங்க வேண்டுமதோ வதுவே நீங்க விவ்விரண்டின்
எது வாகு நியதியினு லியைந்த பகுதி நன்குணர
எது வாகும் புரணநிலை யிருந்தே காலங் கழிப்போமே. (கசுஉ)

எதே தினிதா வந்துறினு மேதே திதயம் விருப்புறினும்
எதே திடராய் நேர்ந்திடினு மேதே துள்ளந் தளர்வுறினும்
எதே தும்நஞ் சந்நிதியி லியன்ற விநோத மாநோக்கி
எதே துக்குஞ் சலனமின்றி யிரவி போலக் காண்போமே. (கசுங)

தேகத் தோடும் பெற்றிருந்த சீவன் முத்தி நிலைமைதனை
ஊகத் தோடுந் தெரிந்துரைக்கி லுளதாஞ் சித்தஞ் சத்துவமா
மாகத் திதய புண்டரிக வமல வானி னடித்தமர்ந்து
சோகந் தீரச் சமாதியதாந் துரிய வாழ்விற் சுகிப்பதுவே. (கசுச)

தரிக்குஞ் சமட்டி வியட்டியதாச் சார்ந்த சித்த விவகாரம்
புரிக்கும் பிரம சங்கற்பப் புரண பாக மானாலும்
மரிக்கு மாயா மயவுயிர்க்கு மகத்தாஞ் சிவற்கும் வெவ்வேறும்
விரிக்கும் பரமற் குபாதியிலை விபாக வுயிர்க்கே சுகதுக்கம். (கசுரு)

மூலப் பரத்தி னிடைநின்று முளைத்த வுயிர்கள் பலகோடி
தூலத் தனுவாற் றமைமறந்து சூழ்ந்த வினையாற் பிறந்திறந்து
ஞாலத் துள்ளே நடித்தோய்ந்து நவைதீர் சிவத்தோ டொன்றுறுமுக்
காலத் தினுமச் சிவபுரணங் கலங்காச் சன்மாத் திரமாமே. (கசுசு)

எங்கு நிறைந்த தனதருளி லிலங்கு சீவேஸ் வரசகத்தைச்
சங்கை யின்றிச் சதாநோக்கிச் சலன மில்லா திருக்குநிலை
தங்கிப் பரிபூ ரணச்செல்வஞ் சார்வ தல்லா லுடலொழிந்து
பங்க முறுதல் முத்தியதோ பற்றற் றென்றும் பிறவோமே. (கசுஎ)

தேகத் தளவே பிறப்பிதெனச் சிந்தித் திதனைத் தீர்ப்பதற்கு
ஊகித் தறிய நூல்குருவா லுறுசா தனங்கொண் டுழல்வார்கள்
பாகித் திடற்கிங் கடங்காத பலதே கமதாய்ப் பிறந்திறக்கும்
மோகந் தீர முயலார்காண் முந்து மாயா மயக்கமிதே. (கசுஅ)

பிறப்பு மிறப்பு மென்றுமிலோம் பிறந்தா லன்றே விறப்புளதாம்
மறப்பாம் பந்த முண்டானல் மயறீர் முத்தி பெறவேண்டுஞ்
சிறப்பில் தேக மெத்தனையோ திகழு மெமதா டரங்கத்தில்
அறப்பொய் வேடங் கொண்டாட லகலா தென்றுங் காண்போமே.

சீவன் முத்தி யலான்மேலைத் திகழும் விதேக முத்தியென்பார்
ஓவில் சிதாகா யமதொன்றே யுணர்வா யுயிராய் மனமாகித்
தாவு பலசங் கற்பமதாய்ச் சதாகா லமுநின் றுடல்செயும்
வாவு முடல்தீர் சூனியத்தில் மருவு முத்தி யெங்குளதே. (கஎ0)

மறந்து முளைத்து மாய்கின்ற மாய வுயிர்க்கே பந்தமதாஞ்
சிறந்தெல் லாமாய் நிறைந்தபரன் சித்தஞ் சன்மாத் திரமாக
அறந்தை யின்றிக் கதிரவன்போ லனைய வுயிர்க்கு விளக்கமதாந்
திறந்த ஞானக் கண்பெற்ற சிவயோ கியர்க்கு மவ்வாறே. (௧௭௧)

சித்தஞ் சன்மாத் திரமாகச் சிவயோ கியர்க்கிங் கமைதலினால்
சுத்த நிலையிற் பதிந்துடலின் றொழிற்குச் சாட்சி மாத்திரமா
வித்தாய் விளைந்த பிராரத்த வினையோ டடலம் போமளவும்
தத்தா நின்ற விவகாரஞ் சார்ந்து சிவத்தோ டொன்றுவரே. (௧௭௨)

அறிவின் சங்கற் பத்தாலே யகத்திற் புறத்திற் றொடர்சித்தம்
பிரியா நினைவின் பாவனைபோற் பிறங்குங் காட்சிப் பொருளாகிக்
குறியா ருருவ நாமமொடு கொள்ளு மிச்சா விடயமதாய்
நெறியார் திருஷ்டா வாய்நின்று நிலநீள் பாவ மடைந்ததுவே. (௧௭௩)

வேறு.

சிவமொன்றே சிவனுப் பஞ்ச கிர்த்திய தேவ ராகிப்
புவனங்க ளாகித் தோன்றிப் புணர் சரா சரங்களாகி
நவ நவ மானசத்தி நணுகிநீ ணடனஞ் செய்து
தவமிகப் பவ மகன்று தற்பர சாட்சி யாமே. (௧௭௪)

சாட்சி யறிவாச் சுழுத்தியினிற் றங்கிக் கனவின் சங்கற்பக்
காட்சிப் பொருளாய்க் காண்பானுய்க் கலங்கு சுகதுக் கத்துழன்று
மாட்சி யான சாக்கிரத்தில் வளர்ந்த திடபா வனையாலே
தாட்சி யான விடயசுகச் சார்போ தத்தை யடைந்ததுவே. (௧௭௫)

துகளூர் சித்திற் கனந்தசத்தி தொடர்பா யுள்ளு ளிருத்தலினால்
கடமே படமே முதலான கருத்தின் கனபா வனைபோலத்
திடமார் பூத பௌதிகமாச் செறியுஞ் சகநீள் பொருளாகித்
தொடர்பில் சாட்சி மாத்திரமாஞ் சுத்த முத்த ருளமாமே. (௧௭௬)

சித்தே தனது லீலையினாற் றிகழ்சீ வேச சகமாகி
சுத்த சித்த மாத்திரமாத் தொடரும் விநோத நடம்புரிந்து
சத்தாய்ச் சதாகா லமுநிறைந்து தடைதீர் பேரா னந்தமய
முத்த ருள்ள மாதலினுன் முழுதுந் தாமாய்க் காண்பாரே. (௧௭௭)

விநோதப் பரம விளையாட்டை விரித்துக் கூற வேண்டுமெனில்
மநோபா வனைக்கு மெட்டாது வயங்கு முலகிற் சிருட்டிமுதல்
அநாதி யாக நடந்துவரு மனேக சரித விசித்திரத்தை
எனுவி னுலிங் கெடுத்துரைக்க வெண்ணில் புதுமைத் தாகுமதே.()

சர்வ விளக்க மாஞ்சித்து சர்வ வுயிர்க்கு ளிலங்குதலால்
மர்ம முணரா தவரவர்கள் மதித்த படியே பலமதங்கள்
தர்மா தர்மம் வெவ்வேருச் சாத்தி ரங்கள் கற்பித்து
பிர்மம் சத்தி விலாசத்தைப் பேதித் தனந்த விதமுரைப்பார். (களகூ)

பிரம சத்தி யொன்ருயும் பேத விருத்தி யாற்பலவாய்
வருமா தேவர் நரருரகர் வளர்சங் கமதா வரம்பலவாய்ப்
பெருகு செயலுங் குணகுணங்கள் பேத மளவி லாதுண்டாய்
வரமார் வினையா லொன்றையொன்று மாறி மாறி வருத்துமதே. ()

பாச வினையை விரித்துரைக்கிற் பரம சுகத்தைக் கைவிட்டு
கோச காரப் புழுப்போலக் கூடொன் றமைத்தே யதில்வருந்தி
நேச மாகுந் தனைமாய்க்கு நெடிய தொழிலிற் சுகித்துயிர்கள்
ஆசை யாலே பவக்கடலி லமிழ்ந்திக் கரைகா ணுரவமே. (கஅக)

உலகா யுதன்போல் நாஸ்தியென்று முதிக்குங் கருவி மூலமென்றும்
நிலனிற் ருேன்றி மறையுயிர்கள் நேர்ந்த படியே கற்பிதமாம்
பலவா மூட விருத்தியினுற் பகுத்திங் குணர்தற் கரிதான
நலமார் பரம சத்திநிலை நாட விகற்பம் பலவுளதே. (கஅஉ)

மிக்க வொளியா மினலொளியில் விழிக்குப் பார்வை மழுங்குதல்
போல், முக்கா லத்து மொளிர்தருமா முழுப்பே ரொளியாஞ் சிதாகா
யம், தொக்க நெடுந் தூ ரம்விரிந்து சுடர்க்குட் புறத்தும் விளங்கிட
வுஞ், சிக்கு மாயை யாற்பெருங்கண் டெரியாப் பாச வலியாலே. ()

வேறு.

தேசுக்குத் தேசாய் நின்று திகழ்தரு ஞானகாயம்
மாசற நிறைந்த பான்மை மந்தர்க்கு வயங்கா தத்தால்
பாசவைங் கோச மோகம் படைத்தியா னெனதென் ருேதி
ஈசமாந் தேகோ கத்தால் ஈள்பவ மடைகின் ருரே. (கஅச)

வேறு.

மூல மின்றி யண்டமெலா முளைத்துத் தாமே யுளவென்றும்
மூல மின்றி யாதிமுதல் முதிர்பூ தத்தின் கூட்டுறவால்
மூல மின்றி யெவ்வுயிரு மொய்த்தே மாறி வருமெனவும்
மூல மின்றி யஞ்ஞானத் தாலே மொழிந்து மாய்வாரே. (௧அ௫)

மூலா தார மின்றிவளர் முழுமோ கத்தாற் றமைமறந்து
நூலாற் குருவாற் பரமநிலை நுணிய விவேகத் தாலுணரார்
காலா தீத மாய்விளங்கிக் கணித மிறந்த சதுர்ப்பாடாம்
மேலாம் வித்தை விளைவிதென விழித்துங் காணு ரந்தகர்போல். ()

வித்தி லாது விளைந்ததென்றும் மேற்ருய் தந்தை யில்லாது
சத்தி யோடு முயிர்களெலாஞ் சனித்த தெங்கே கண்டிருந்தார்
புத்தி போன குருட்டுவழி புலம்பித் தவிக்கு நாஸ்திகர்கள்
எத்தோ டிந்தச் சிருட்டியினி லிணைகூ றுதற்கு மிசையாரோ. (௧அ௭)

சிற்சத் தியதுள் ளுடைமையினுற் செனிக்கும் பலவாந் தாவரங்கள்
பற்று முயிர்க ளவ்வாறே பலவாந் தரமாய்த் தோன்றிநின்ற
பெற்ற தனுவால் விளைவினையாற் பேத மாக மாறிவரல்
முற்று முணரும் பகுத்தறிவில் மூடர் கோட்பா டவமாமே.(௧அஅ)

வேறு.

அகண்டமா யேக விரசமாஞ்சச்சி தானந்த ஞான வாகாயம், நிகண்டமா யாவு நிறைந்திடுபான்மை நிகழ்த்திடிற் பகிரண்டத் திந்தச், சகந்தனின் மாயா விடயஞா னத்தாற் சார்ந்திடு திரிபுடி மயமாம், அகம்விருத் தியினுற் கண்டமாங்கண்ட வனைத்தையும் பிரித்துணர் தலினே.

பிரித்துணர்நாம ரூபபே தத்தாற் பின்னமாஞ் சிற்றறி வாகி
வருத்துதன்றேகத் தளவதாய்ச் சித்த மனம்புந்தி யாகிய மோகம்
தரித்தலாற்சீவ பாவமே யடைந்து சனித்திடல் மரித்திட லாதி
பெருத்திடு சுகதுக் கங்களிலமிழ்ந்திப் பிறவியை மருவிய தன்றே.()

பிறப்பெனு மோகம் பொன்னினிற் பணியும் புணரியி லலைநுரை போலத், திறப்படா துண்டாய்த் தன்மயங் கெடாது திகழ்தரு பேதமே யல்லால், சிறப்புறு சிதாகா யஞ்சிதை வின்றித் திரிபுடி யாத்திகழ்ந் திடினும், மறப்பறு மதியால் யாவுமா நிறைந்து வயங்குறு முத்தர்சித் தமதே. (கககூ)

வேறு.

சுவாது பூதியாம் பூரண நோக்கமே தொடர்வார்
அவாவு சங்கற்ப வாசனை யான்மன மசைந்தால்
தவாத மோக சம்சாரமே விடுமிச்சை தவிர்ந்தால்
உவா மதிக்குநே ரானந்த மனந்தனி லுதிக்கும். (ககஉ)

சீவன் முத்தர்கள் செறிநிரு விகற்பமாஞ் சமாதி
தாவி யோடுமா மனந்தனிற் றணிந்துப சாந்தம்
ஓவி லாத்தும வுண்மையி லுபசம மடைந்து
ஆவி யார்சல னந்தவிர்ந் தானந்த மாதல். (ககங)

சலனமற் றுடல் கரணங்கள் சரித்திடா தமைந்தால்
நிலனி லித்தனு வுணவற நெடும்பகல் வைகும்
விலகு ருதசித் தானந்த மாத்திரம் விளங்குங்
குலவு றும்பர துரியத்தி லேகமாய்க் குலாவும். (ககச)

வேறு.

ஈட்டிய கன்ம சேட மிருந்திடு காறுஞ் சித்தங்
கூட்டிய தனுவைக் காத்துக் குறியில்பூ ரணமாய் நின்று
* சாட்டிய மின்றிச் சர்வந் தானுகு மநுபோ கத்தால்
மீட்டுமிவ் வுலக வியாபா ரங்கட்கு வேறு காதே. (ககரு)

சங்கற்ப மாத்தி ரத்திற் சரீரந்தா னும்முன் றோன்றும்
சங்கற்ப மாத்தி ரத்திற் சார்ந்தபல் பொருள் வெவ் வேறாய்ச்
சங்கற்ப மாத்தி ரத்திற் சார்சுக துக்கத் தாழ்ந்து
சங்கற்ப மாத்தி ரத்திற் சரித்திடுஞ் சித்தந் தானே. (ககசு)

---

* சாட்டியம் = நோய்.

சங்கற்ப விகற்பநீங்கிச் சகமெது யாமா ரென்னச்
சங்கற்ப விகற்பத்துண்டாஞ் சகந்தனில் வேறன் றென்று
சங்கற்ப விகற்பமில்லாத் தனைப்பர மாக நோக்கிச்
சங்கற்ப விகற்பமில் சாட்சாத்கார மடைவர் முத்தர். (௧௯௭)

சித்தொன்றே சித்தமாகிச் செறிபல சங்கற் பத்தால்
தொத்திய விநோதமேவித் தொடர்பல சீவ னாகி
நித்திய நிலைமாறாது நிகழ்பல வடிவம் பூண்டு
சுத்தமாய்ச் சர்வாதாரத் துரியமாய் நிறையு மன்றே. (௧௯௮)

உலகமும் பரமும் யாமு மொருபொரு ளென்னு நன்னூல்
நலமிகு குருவாற் சுவா நு பவமுற நன்கா ராய்ந்து
பலவுரு நாம மோடும் படர்பொரு ளனைத்து நம்மில்
சலனவா தனையாற் றோன்றிச் சமிக்குமென் றுணர வேண்டும். ()

பிறப்பொடு மிறப்பு மில்லாப் பெரியவர் நிலையு ணர்த்தின்
மறப்பொடு நினைப்பு மான மனமுதற் கருவி யாகா
சிறப்பொடு மென்று மூவாத் திகழ்ஞான கரம தாகும்
திறப்படா வவத்தை கண்டு திகழ்சிற்சா மான்ய மாமே. (௨௦௦)

மருத்தொடு கலந்து நின்று வளர்பூதா காயத் துள்ளும்
திருத்தமாஞ் சங்கற் பத்தாற் றிகழ்மன காயத் துள்ளும்
பெருத்தபல் லண்ட மாகிப் பிறங்குதூ லங்கட் குள்ளும்
கருத்துறு மிருடே சாதி கதிர்கந்த லஞ்ஞா னத்தும். (௨௦௧)

விரிந்தெலாம் விளக்கி யொன்றால் விளங்கிடா திருக்குஞ் சத்துப்
பொருந்துபே ரறிவாற் சிற்சா மான்யமா ஞான காயம்
மருவுமா தார மின்றி வயங்குசர் வார்த்தா காரம்
பெரியவித் தேகந் தன்னிற் பெற்றவர் பிறந்து மாயார். (௨௦௨)

சிற்சுட ராகி யெங்குந் திகழ்சிதா காயந் தாமாய்
முற்றுமாய் நிறைந்த முத்தர் மயித்திரி கருணை யோடும்
பற்றுறு முபேட்சை நல்ல முதிதையும் பயிலுஞ் சாந்த
நற்றவர் சங்கத்தோடும் நாளுநாள் கழிப்பர் நன்றே. (௨௦௩)

வேறு.

தேகேந் தியங்க டாமாகத் திகைக்கு முயிர்கள் பலநிற்க
ஆகத் திருந்தே யண்டமெலா மளந்து முயிர்க ளுண்ணிறைந்தும்
பாகித் தறியு மஞ்ஞானப் பார்வை நீங்கி யேகமதாய்
ஊகித் தெம்மை யறிவுருவா யுண்மை யாகக் கண்டோமே. (உ௦௪)

சிதாகா யந்தா னேகமதாத் திகழ்ந்து மகத்தாஞ் சத்தியினல்
விதாவி தங்க ளனந்தமதாம் விவித சீவ வடிவாகி
உதார விருத்தி வெவ்வேறு வுலகிற் பலகா னடித்தமர்ந்து
சதாகா லமுந்தான் பரம்பரையாச் சர்வ விநோத மடைதருமே. (உ௦௫)

தொடர்பாய் விரிந்த பேரறிவே துகளில் பரம சிதாகாயம்
படர்நீ ணிலத்திற் பலபொருளும் பகுத்துக் காண்டற் காதாரம்
அடர்ந்தண் டமெலாம் வியாபித்த வனைய சித்தே கலந்துறலால்
சடமா யசட மாய்விரிந்த சகல பொருளும் விளங்குமதே. (உ௦௬)

பிரிவாய்ச் சடமா யுருநாமம் பெற்ற பொருளைப் பொருளறியா
விரிவியா பகமா மனந்தானே விளங்க வவற்றைப் பகுத்துணரும்
பெருகுஞ் சித்தே நடுநின்றும் பேசு மவற்று ணிறைந்திருந்தும்
உருநா மமிலா வொன்றாகி யொளிகட் கெல்லா மொளியாமே. ()

மேலுங் கீழு மிடைநடுவும் வியாபித் திருக்குஞ் சித்தினிடை
ஞால முதற்பல் லாயிரமா கோடி யண்டம் நனிதோன்றி
தூல சூக்க காரணமாத் தொடர்பல் பொருளி னுட்புறனும்
சால நிறைந்த பேரறிவாய்ச் சாட்சி யாதல் சத்தியமே. (உ௦அ)

அணுவுக் கணுவாஞ் சிதாகாய மனைத்தி னுள்ளு முருவிநின்ற
திணிய படிகத் துண்ணின்று திகழும் புறனுள் விளங்கொளிபோல்
கணித மிகல்சிற் சுடருயிர்கள் கருத்து ணின்று விளங்குதலால்
அணிமா வாதி பகுத்தறிவா லனைத்துத் தொழிலு நடக்குமதே. ()

பானுக் கிரணந் தனைமறைத்துப் படர்மே கத்தை யூடுருவி
வானின் றுலகம் விளக்கியெதிர் மதியா ருடுக்கள் விளக்குதல்போல்
மேனின் றெங்கும் வியாபித்த விமல ஞான காயமதே
நானென் றுங்காங் கிருந்தறிவாய் நவில்தத் துவங்கள் விளக்குமதே.

சூக்க வைம்பூ தங்களையுந் தொடரும் பஞ்சீ கரணத்தால்
ஆக்குந் தூல பௌதீக மனைத்துஞ் சிற்சத் தியினாலே
வீக்கு மாயா விலாசத்தால் விநோத மாகப் படைத்தளித்து
நீக்குஞ் சிதாகா யந்தானே நிகழா ரறிவாய் நிறைந்ததுவே. (உகக)

திர்சியா திர்சியப் பலபொருளுஞ் செனித்துத் தன௲கு ணிறைந்திருந்
வரிசை யாக விளங்கிடவும் மகத்தா யணுவு மிடையின்றிப் [தும்
பரிசிக் கரிதாய்க் கற்போலப் படையா லனலா னிக்கரிதாய்ப்
பெரிய சிதாகா யமதுளமாய்ப் பிறங்கா ரறிவாய் நிறைந்ததுவே. ()

எண்ணில் கோடி பிரமாண்ட மிவ்வுள் ளத்தி லினிதிருந்து
திண்ணி தாக வசைவின்றித் திகழு மிவைக டனிலொருபால்
வண்ண மாக நியதிவழி மாறா தோங்கி விரிந்திருக்கக்
கண்ணங் கங்கு முதவுபர மாகா யத்தி னிலையிதுவே. (உகங)

காணும் பொருளுங் காண்பொருளுங் கலவா தெட்டா திருந்திடவுங்
காணும் பொருட்குக் காட்டுபொருள் கலந்திவ் விரண்டின் வியாபித்து
காணும் படியா யிடைநிறைந்து கலக்கும் படியே காட்டுதலால்
காணும் பொருளுஞ் சித்தாகிக் கண்ட பொருளும் பொருளாமே. ()

காண நிறைந்து காட்டுபொருள் காண்பான் காணப் படுபொருளாய்
பூணுஞ் சங்கற் பத்தளவாப் பொருந்து பலவாம் வடிவெடுத்துப் [ப்
பேணுஞ் சகமா யுயிராகிப் பிறங்கு மூலப் பரம்பொருளாய்
மாணும் படியெங் கணுநிறைந்து வயங்கு மதனை மறந்தீரே. (உகரு)

சங்கற் பத்தாற் பலவாகச் சார்ந்த வினையின் வழிபிரிந்து
சங்கற் பத்தாற் பலகோடி சராச ரங்க ளாய்விரிந்து
சங்கற் பத்தாற் றனைமறந்து ராகத் துவேஷஞ் சமைதலினால்
சங்கற் பத்தாற் சுகதுக்கத் தாழ்ந்து பிறவி சார்ந்தனவே. (உகசு)

விடய புறச்சங் கற்பத்தால் மிகுநாள் வளர்ந்த வாசனையால்
தொடரு மஞ்ஞா னத்தாலே தோன்று சீவசி தாபாசன்
படரு மிச்சை யாலொன்றைப் பகுத்து வெவ்வே றுக்கருதி
இடரின் மூழ்கிப் பவக்கடல்விட் டேறா திருத்தல் பேதைமையே.()

யானு ரிந்த வுலகமே திவைக்கு மூலப் பொருளேது
தானே தோன்றிற் றெனினிதனை யியக்குஞ் சத்தி யாரதென
ஆனு விசாரம் பிறந்தளவே யண்ணல் குருவா யெதிர்தோன்றி
ஊனு ருடலில் நீதானு மென்னு முண்மை விளக்குவரே. (௨௧௮)

இந்த முதற்பூ மியைப்பெறுதற் கெட்டா திருக்கு மியல்புரைக்கில்
தொந்தித் திருந்த பாசபந்தத் தொடர்பால் வினையாற் கட்டுண்டு
புந்தி மயங்கி யான்சிறியன் புவனங் களினி ணிலையறியேன்
தந்த வினையின் வழிவருந்திச் சரித்துத் தளர்தல் விதியென்றே. ()

ஊழி காலந் தொட்டிந்த வுலக புவனங் களிற்பிறந்து
சூழு மாகா மியவினையாற் றொடர்சஞ் சிதத்தாற் றரும்பவங்கள்
எழு மாறி நல்வினையா லிசைந்த மனுவா மித்தேகம்
பாழிற் போகா தருணெறியே பரம நிலையைத் தேடுமினே. (௨௨௦)

கல்வி மேலாம் பலந்தருமென் கற்ற பெரியோர் சொற்கொண்டு
நல்ல நூல்கள் கற்றுணர்ந்தும் நணுகித் தேக நிலையுணரார்
செல்வ மொன்றுற் சகலபலஞ் சேர லாமென் றுழைத்தடைந்தும்
புல்லும் வினைக்கீ டாய்ப்புசித்துப் பொருந்து தருமந் தேடாரே. ()

தரும பலத்தை யார்கண்டார் தானே யுழைத்துத் தேடியதை
பெருமை யாக வநுபவித்தல் பிறந்த பயனு மெனக்கருதி
வருநீள் பிறவித் துயரகல மதியார் பவநீள் வலியறியார்
இருமா வினையால் வருபேத மிலக்கில் சீவர் துயர்கண்டே. (௨௨௨)

தேவர்க் கிரண்டா மனுஷதனு சிறக்கப் பெற்றும் பரமநிலை
பாவம் புண்யம் பகுத்துணரும் பண்பா மறிவு பெற்றிருந்துஞ்
சாவு மணித்தாக் கண்டிருந்துஞ் சற்றும் வருநோக் கில்லாது
தாவு மவாவாற் றனைமறந்து சனனக் கடலில் வீழ்வாரே. (௨௨௩)

செல்வஞ் சிறிது பெற்றதினுற் றிகைத்து யாமே பெரியமென
நல்லோ ருரைக்குந் தருமநெறி நாட்டும் பரம நிலையிகழ்ந்து
புல்லோர் கூட்டம் பொருந்தியவர் புலம்பு மவநீ ணெறிச்சென்று
கல்லா தவரிற் கடையாகிக் கடிய நரகிற் புகுவாரே. (௨௨௪)

சூழும் வினைக்கீ டாயின்மை தொடர்ந்தாற் பிறரைக் கண்டேங்கிப்
பாழுந் தெய்வ மெனைப்படைத்துப் பரத விக்க விட்டதென
ஆழு மறிவின் மையினாலே யவாமே விட்டுப் பழிபாவந்
தாழும் பிறவிக் கானவினை தன்னை யீட்டிச் சாவாரே. (உஉ௫)

ஊழி காலந் தொடுத்திந்த வுலகிற் பிறந்து மாய்ந்தலைந்து
பாழிற் சென்ற பலசென்மப் பாட்டை யறியத் தகுமாந்தர்
வாழி மனந்தான் சலியாதோ வளரு மாயா மோகமதோ
தாழிப் பவத்தை வலிதாகச் சார்தற் கேது சாற்றரிதே. (உஉ௬)

மண்ணிற் பிறந்து பாழ்க்குழைத்தும் மாண்ட வுயிர்கள் பலகோடி
எண்ணத் தகுநல் வினையாலே யெடுத்த விந்த மனுஷதனு
வண்ண மாகப் பெற்றிருந்தும் மறந்து தம்மைத் தேடாதார்
நண்ணித் தேகம் விழுமளவில் நாள்வீண் கழித்தோ மெனநலிவார்.()

வேண்டி யடையத் தகும்பரம வித்தை யாலே முத்திநிலை
வேண்டா திருக்க வேண்டவரும் வினையால் வளரும் பலபிறவி
வேண்டார் மேலோர் வினையொழிவில் விசாரித் தடையு மெய்யுண
வேண்டாப் பிறவி சாகரத்தை மேலோர் கடக்க முயல்வாரே. [ர்வால்

நற்சங் கத்தா லிம்மையினு நணுகு மம்மைப் பயன்பெறலாம்
நற்சங் கத்தாற் றுற்சங்க நண்ணு தசுத்த வாசனையும்
நற்சங் கத்தாற் பலபிறவி நணுகும் வினைக ளேர்ந்தகலும்
நற்சங் கத்தா லிம்மையினு நண்ணற் கரிய பொருளிலையே. (உஉ௯)

சாத னங்க ளெலாம்பெற்றுஞ் சார்பொன் றின்றி மனநிலையா
வேத நான்கி னுட்பொருளாம் விமல சச்சி தாநந்த
போத மூல சிதம்பரத்திற் புரியும் பஞ்ச கிர்த்தியஞ்செய்
நாத னடனத் திருக்கோல நாளும் பரவி யடைதரவே. (உ௩௦)

பற்றுக் கோடொன் றில்லாது பரவை கடத்தற் கரிதாம்போல்
முற்று மாகி முழுமுதலா முத்தி மூல மாயிருந்த
சிற்றம் பலமே யண்டமெலாந் திகழு ஞானப் பேரொளியாம்
பற்றும் பவநோய் தீர்ந்தகலப் பரமா நந்த நிலைபெறவே. (உ௩௧)

சிற்றம் பலமே யெங்குநிறைந் திருக்கு நிலையூ கித்துணரின்
சிற்றம் பலமே யெவ்வுயிர்க்குஞ் சித்த மாகிப் பாவனைபோல்
சிற்றம் பலத்தி லெவ்வெவையுந் திகழ விளங்கு மநுபவத்தால்
சிற்றம் பலமே யாநீயாச் சிறந்த சிவாகா ரமதாமே. (உ௩௨)

சர்வஞ் சிவாகா ரமதாகச் சங்க மின்றி யிருந்திடவுஞ்
சர்வ வுயிர்க்குந் தாஞ்சிவமாந் தன்மை தோன்று மயக்கென்னே
சர்வ வுயிர்தம் பாவனைபோற் சனித்து வினையாற் பலவடிவாம்
சர்வ மூலப் பரமநிலை சாராப் பவபா வனையாலே. (உ௩௩)

பவபா வனையா னெடுங்காலம் பலவாம் பிறப்பிற் சுழன்றிளைத்துப்
பவநீள் வினைகள் சமமாகிப் பலித்த வித்தே கந்தனிலே
பவமே வியயா மார்சகத்தைப் படைத்த மூலம் விசாரித்துப்
பவநீங் கியமெய்ப் பரம்பொருளைப் பற்றிப் பவசா கரங்கடப்பீர். ()

பற்றற் றியாவு மாய்நிறைந்த பரம திருச்சிற் றம்பலமே
முற்றும் வியாபித் தகம்புறமு முதிர்பே ரறிவா நமதுநிலை
பற்றி நோக்கிச் சதாகாலப் பழக்கத் தாற்பல் வாதனைகள்
முற்று மகன்று சித்தமுழு மதிபோ னிறைந்தால் முத்தியதே. ()

சித்த சாந்தஞ் சிதம்பரமாத் தானே திகழு மநுபவத்தைச்
சித்த சாந்த முளமேலோர் சிவோகம் பாவித் தடைகின்றார்
சித்த சாந்தம் பெறவேண்டிற் செறியும் பலபா வனைநீங்கி
சித்த சாந்தஞ் சதானந்தத் திகழ்மா நடஞ்சே வித்திடலே. (உ௩௬)

பாவா பாவங் கடந்துநின்ற பரம துரிய நிலையடையத்
தாவா நின்ற விச்சைவழி சரிக்கு மனத்தாற் பெறலாமோ
ஓவா விசாரத் தாற்றெளிந்த வுள்ள நிலையே துரியமதாம்
ஆவா மனத்தின் றொழிற்கெல்லா மகலாச் சாட்சி யாகுமதே.(உ௩௭)

சார திக்குத் தக்கநடை தாவு பரிகள் கொள்ளுதல்போல்
வார விவேக விருத்திவழி மனந்தான் செல்லு மாதலினல்
தீர விசாரித் துணரறிஞர் சித்தஞ் சன்மார்க் கத்திருத்திப்
பார வுலக விவகார பாரங் கழிப்பார் மேலோரே. (உ௩௮)

ஆவி யசைவு தணிந்துமன மசையா விருத்தி மேனேக்கித்
தாவு மசுத்த வாசனைகள் சமித்துச் சர்வ மாநிறைந்தால்
வாவு மனப்பங் தங்களெலாம் மாறி யகன்று போகுமதால்
மூவர் நின்ற மகாபதத்தில் முதிர்பே ரின்ப மடைவாரே. (உ௩௯)

சிதாகா யந்தா னதோமுகமாய்ச் சிருட்டி முறையே வாயுவனல்
மதோத கம்மண் பரிதிமதி மண்ட லங்கள் பாவிநின்று
சதோத யங்கூர் பரவிசும்பிற் சார்ந்து மேனேக் கியதாலே
எதாவி ருத்தி யான்மாந்த ரெண்ண மேனேக் குதலியல்பே. (உ௪0)

பூதா காயம் வாயுவொடும் புணர்சங் கற்ப மனத்தினெடும்
பேதா பேதத் தாவரசங் கமங்களெல்லாம் பிறங்கு தற்காம்
ஆசா ரமதாம் பாவிசும்பே யனைத்தி னுள்ளு நிறைந் திருந்து
சாதா ரணமாப் பின்னமின்றி சர்வ தொழிற்குஞ் சார்பாமே. (உ௪௧)

சார்பொன் றின்றிச் சடாசடங்கள் தானே சத்தாய் விளங்குமதோ
சார்பொன் றின்றிச் சித்தமுதற் றத்து வங்கள் சித்தாமோ
சார்பொன் றின்றிச் சனித்தவுயிர் தனித்துத் தானே சரிக்குமதோ
சார்பொன் றின்றி யெவ்வுயிருந் தரிக்கச் சுகமும் விளையாதே. ()

ஆனந் தத்தா லறிவுநிலை யறிவாற் சத்தி னிலையுளதாம்
தானந் தமிலாப் பரம்பொருளின் தகைமை தானே விளங்குமலால்
ஊனந் தவிர்நான் மறைமுதலா வுணரும்பெரியோர்சொற்பொருளும்
மோனந் தன்னல் விளக்குமலால் முதலா மெவைக்கு முதலாமே. ()

ஆஸ்தி யென்று நாஸ்தியென்று மறிவா லுணர்ந்திங் குரைப்பதலால்
நாஸ்தி யென்ரு லறிவில்லை நல்ல வறிவிங் கிலாமையினல்
பூஸ்தி ரஞ்சொல் புல்லறிவும் புணர்மா யையினீள் சம்பந்தம்
வாஸ்த மாக விருணிறைந்தால் மலர்க்க ணிருந்துந் தெரியாதே. ()

அறிவின் விலாச மாய்த்தோன்று மண்ட மெல்லாந் தமதாகப்
பிறியாச் சிவாகா ரம்பெற்ரோர் பெருதொன் றில்லை யாதலினல்
சிறியோ ரென்னச் சிலபொருளைத் தேடித் திகைக்கு மயக்கறவே
நெறியே நேதித் துயர்சுருதி நிஷேதிக் கினுமெல் லாம்பரமே. ()

தன்னி லிருந்து சங்கற்பத் தாலேதோன்றித் தனிலொ டுங்கும்
மன்னு முலகை வேருக மதித்தியானென தென்சீவன்
என்ன மோகித் திடர்க்கடலி லின்ன லழ்கா தேகமதாம்
பின்ன மில்லா தெலாந்தாமாய்ப் பெரியோர் கண்டு மகிழ்வாரே. ()

ஏதுந் தாமா யமைந்திருக்க வெதையா சிப்பா ரெதைக்கருதி
ஏதுக் காக வகங்கரிப்பா ரெதைக்கண் டிகழ்வார் விரோதிப்பார்
ஏதுக் குந்தா மாதார மெனவே வியந்து மகிழ்வதலால்
ஏதுக் குந்தாஞ் சலனமின்றி யிருந்திங் கெல்லாங் காண்பாரே. ()

மனமே யுலகாய் விரிந்திருக்கு மாயா தோற்ற மிகவளர்ந்து
கனவு போல நனவில்வருங் காட்சி மோகச் சிற்றறிவால்
பினமி லுலகைப் பிரித்துணரும் பேத நீங்கு போறிவாம்
நினைவி லேக பாவனையால் நிலைபெற் றிருப்பார் மேலோரே.(உ௪அ)

அறிவிற் சமபா வனைசாந்தி சந்தோ ஷமதா மமலநிலை
நெறியே மனத்தை நிறுத்தியிவ ணெடிது விரிந்த சகத்தோற்றம்
சிறிதாப் பெரிதா மேனேக்கிற் றிகழ்வித் துள்ள முகமலர்ந்து
செறிபே ரின்ப மயமாகத் திகழ்ந்து சரிப்பார் மேலோரே. (உ௪௯)

சித்த சாந்த மேசிவமாத் திகழ்பே ரறிவாம் பரமநிலை
சுத்த மான வந்நிலையிற் சுவா நு பவமாய்ச் சுகித்திருந்து
மெய்த்த வின்சொ லன்பினெடு மேலா மருளு மெவ்வுயிர்க்கும்
வைத்துச் சோக மோகமெலாம் மாற்றி நிற்பார் மேலோரே. (உ௫0)

தோற்றுஞ் சகமோ கத்தின்வழி தொடரு மிச்சா சங்கற்பஞ்
சாற்று மனமா யுயிர்களினுட் டங்கி நெடுங்கால் வாசனையால்
பேர்த்தற் கரிதா யிருந்தாலும் பெரிது முயன்றிந் நூன்முறையே
தேற்று முண்மை நிலையுணர்ந்து தீர்க்க வேண்டுஞ் சாதகரே.(உ௫க)

சகமோ கத்தாற் சிற்றறிவாற் றுமே யுலகிற் சிந்தித்து
நிகமா கமவாக் கியநெறியே நெடிதா ராய்தற் கரிதாகி
அகமார் பிறப்பிற் கிடைத்ததுவே யன்றி வேறென் றிலையென்னப்
புகன்மா சகற்றி யருட்போதம் பொருந்தற் கிந்நூல் புகன்றதுவே.()

பிரம வொளியிற் றன்வேறாப் பிரியா வநுபூ தியைவிளக்கிப்
பிரம வொளியா மிவ்வுலகிற் பிறங்கி யெல்லா மாய்விளங்கும்
பிரம வொளியே யாமாகப் பெரிதிந் நூலை விரித்திடினும்
பிரம வொளியிற் குறையாது பெரிய வருளிற் பிரியோமே.(உ௫௩)

வேறு.

தேகதா தான்மி யத்தாற் றிகழுமிந் தியங்க ளாலே
ஆகமார் சுகதுக் கங்கள் அறிதருங் கரணஞ் சீவன்
சோகமோ கங்கண் மேவத் தொடர்பாக விளக்கி னாலும்
ஏகமாம் பிரம மென்றும் இகலில்மெய்ச் சாட்சி யாமே. (உ௫௪)

சாட்சிமாத் திரமாய் நின்ற தனிப்பரம் பொருள்யா மாசக்
காட்சியாற் றோன்றி நானு கருமங்கள் புரியுஞ் சீவன்
மாட்சியாஞ் சுகதுக் கங்கள் மருவினு நிலையாய் வானில்
சேட்சியா மதிபோ லென்றுந் திகைப்பறு சிந்தை வேண்டும்.(உ௫௫)

வேறு.

கள்ள னென்றும் பாம்பென்றுங் கலங்கி வருந்து மிருடார
உள்ள பழுதை கட்டையென வுண்மை விளக்கு மாதவன்போல்
விள்ளு மிந்நூல் விளக்கத்தால் விரிந்த சீவேஸ் வரநியதி
எள்ளா தெல்லாஞ் சிவமயமா மிடர்தீர் நிஜானந் தம்பெறவே. ()

பெருத்தவிவ் வுலக சாலப் பேதநீள் விநோதங் கண்டும்
இருப்புழி மௌனஞ் சாந்தி சமமெய்தி யிராக மின்றி
பொருத்தமா ருயிர்க்கி ரங்கிப் பொலிதரு கற்ப கம்போல்
கருத்துள பரம போதங் கனம்பெற வளிப்பர் மேலோர். (உ௫௭)

திருச்சிற்றம்பலம்.

சொரூபானுசந்தானம்.

சம்பூர்ணம்.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருப்போரூர்ச்

சந்நிதிமுறை.

குறுங்கழி நெடில் விருத்தம்.

அருட்கட றதும்பிக் கவுட்செவிச் சார
லருவிபாய்ந் தெழிதரு மசலம்
விருப்புற மருப்பிற் கடகமொன் றெடுத்து
வீறுகிம் புரியெனத் தரிப்போய்
சுருப்பினந் தொடருங் கதுப்பினுர் மயக்கிற்
றுளைந்துறு தெனையினி யளிப்பாய்
பொருப்பன புயத்தோய் மயிற்பரி யுகைத்தோய்
போரிவா ழாறுமா முகனே. (க)

அறிவுதன் னினைவிற் கலந்துறு போதி
லரும்பர முயிர்சக முளவாம்
பிறிவிலவ் வறிவந் நினைவினை யகன்றாற்
பேதாபே தங்களொன் றின்றி
நெறியுறத் தானே தன்னிடத் திருக்கு
நிச்சய மென்றெனக் கிசைத்தான்
பொறிமறு மார்பன் மருகவே ளெனையாள்
போரிவா ழாறுமா முகனே. (உ)

நினைவறி வெனவிவ் விரண்டினை விரித்து
நிகழ்த்துறுஞ் சுருதியீண் டிவற்றி
னினைவிரண் டாகும் பரனினை வெனவு
நிலவுறு முயிர்நினை வெனவும்

புனைபர நினைவு சகமுயிர் நினைவு
    புரிந்ததைப் பிடிக்குமென் றிசைத்தான்
புனையரும் பாரஞ் சொரிதரு நெய்தற்
    போரிவா ழாறுமா முகனே. (௩)

பரனது முகத்திற் குலகுபொய் சீவன்
    படிற்றுளக் கினுக்கது மெய்ம்மை
திரமுறு சாட்சி தானெனச் சீவன்
    றெரிந்திடிற் பரன்மன மிவற்காம்
விரவிய சகமப் போதுபொய் யாகி
    விளங்குறு மென்றெனக் கிசைத்தான்
புரமெரி செய்தோ னுவந்துபெற் றெடுத்த
    போரிவா ழாறுமா முகனே. (௪)

அறிவினை நோக்கி லுயிர்வய மாகு
    மகமனஞ் சகத்தையவ் வுயிர்தான்
பிறிபட நோக்கின் மனத்தினின் வயமாம்
    பிறப்புமீ திதன்வயப் படாது
நெறியுறு மறிவின் மிகப்பரி சிக்கி
    னினைப்பருங் கதியுமீ தென்றான்
பொறிமயி லேறுஞ் சேவக னெனையாள்
    போரிவா ழாறுமா முகனே. (௫)

எதொரு நினைவிங் கெழுமது மனமீ
    தெனதென வருமிதன் மூலந்
தீதறு மூல வகங்கர மீதியா
    னென்றெழுஞ் செப்புமிங் கிவைக்கு
மூதிரு ளவித்தை மூலமீ தகன்றான்
    மொய்யறி வெனவெனக் கிசைத்தான்
போதக மார்க்கும் புகன்றமெய்க் குரவன்
    போரிவா ழாறுமா முகனே. (௬)

சச்சிதா நந்த மெனும் பெயர் மூன்றிற்
    றழுவுமா வரணமூன் றிவைதா

நிச்சய வறிவாற் சமாதிஞா னத்தா
ணிகழ்வுறு சகசஞா னத்தா
லச்சமின் றகலு மிவற்றினை யறியென்
றருட்கட னிறைத்தெனை யளித்தான்
பொய்ச்சழக் ககன்ற மனத்தினர் நினைக்கும்
போரிவா ழாறுமா முகனே. (எ)

சுருதியின் றுணிவா னினைவுகொண் டுலகந்
துச்சமென் றுணர்தனிச் சயமாங்
கருதுறு நினைவை யடக்கியிவ் வுலகங்
கானலென் றுணர்ந்திடல் சமாதி
யிருவகை யாய்முன் னுரைத்தவை யின்றி
யிலங்கறி வுருவமா யிருத்தல்
பொருவறு சகச ஞானமென் றிசைத்தான்
போரிவா ழாறுமா முகனே. (அ)

நிச்சய ஞானஞ் சமாதிஞா னங்க
ணிராசையார் மனத்தினிற் கலங்கா
தெச்சமென் றிருக்கு மாசையார் மனத்தி
லிரண்டுஞா னங்களுங் கலங்கு
நச்சுதல் வெகுளி யின்றிய சகச
ஞானிக ணசையுளர் போலப்
பொய்ச்சகத் துறினுங் கலங்குறு ரென்றான்
போரிவா ழாறுமா முகனே. (௯)

சித்தொரு நான்கிற் பிரமங்கூ டத்தன்
செப்புமா யாரகி தங்கண்
மத்தமி லீச னுயிர்கடா மாயா
சகிதங்கள் வழுத்துமிவ் வீசன்
சத்தெனுந் தன்னை மறப்பிலா மையினுற்
றருகதி தேடிலன் சீவன்
பொய்த்தலில் வீடு தேடுமென் றிசைத்தான்
போரிவா ழாறுமா முகனே. (௧௦)

ஓதுரு நாம மியானென தசுத்த
முயர்ந்துள சுத்தவா தனைக
ளாதிய திரோத மனுக்கிர கித்தா
லாக்கைவாக் கியக்கவா தனைக
ளேதமில் காட்சி காண்பவ னென்ற
விவற்றுளோர் வகுப்பினுன் மனத்தின்
போதமி னினைவைப் பகுத்தடக் கென்றான்
போரிவா ழாறுமா முகனே. (கக)

கயிலைவா ழரசு தந்தகற் பகமக்
கனவர சுறைகொடிக் கனிநா
லியல்புறு கற்புக் கன்னிமா ரிருவ
ரிருமருங் குறைவட மேரு
வயிலுடன் மயிலுங் கோழியு மாடு
மழகுடன் படைத்தமெய்க் கடவுள்
புயலினஞ் சுரந்து பொழிதரு நீதிப்
போரிவா ழாறுவா முகனே. (கஉ)

தடவரைப் பிறந்த நதியராச் சென்று
தண்கடற் படமுடி மீது
சுடர்விரி யுதய கதிர்மணி விளக்குஞ்
சுந்தரப் போரிவே லிறையே
மடமையின் றடியே னுனதரு ளமிர்த
வாரியின் மூழ்கிட நினையாய்
குடமுனி சிவந்த சடைமுடி யிவர்ந்த
குரவணி சரணவா ரிசனே. (கரு)

நேரிசைவெண்பா.

அன்ன மளிகுழூ ரண்டினரைக் காக்குமூர்
சொன்ன மழைபோற் சொரியுமூ—ருன்னினர்க்குத்
தீதுபிணி தீர்க்குமூர் செவ்வே ளிருக்குமூ
ரோது திருப்போரு ரெம்மூர்.

முற்றுப்பெற்றது.

சிவமயம்.

சந்யாசிகளின்

பத்து நாமங்கள்.

ஈஶ்வரர், விஷ்ணு, பிரஹ்மா, வசிட்டர், சக்தி, (சக்தி=வசிட்டர் குமாரர்) பராசரர், வியாசர், சுகர், கௌடபாதர், கோவிந்தபாதர், சங்கரபகவற்பாதர் என்பவர் ஆசிரியர்.

தீர்த்தம், ஆசிரமம், வனம், ஆரண்யம், கிரி, பர்வதம், சாகரம், சரஸ்வதீ, பாரதீ, புரீ என்பன பத்து நாமங்களாம்.

தத்துவமசியாதி இலக்கணம் வாய்ந்ததிரிவேணி சங்கமத்தின் கண்ணே, தத்துவார்த்த பாவனையால் ஸ்நாநஞ்செய்தல், தீர்த்தமெனச் செப்பப்பெறும்.

ஆழ்ந்து மிகுந்துயர்ந்த ஆசிரமத்தின்கண்ணே, ஆசாபாசம் அனைத்தும் விட்டிருப்பதோடு, விருக்ஷ நீழலை வீடாதிருத்தலே, ஆசிரமமென அறையப்படும்.

தேவ இருஷிகள் நீங்காது நெருங்கிய நிர்மல ஸ்தானமாகிய வனத்தின்கண்ணே வாசஞ்செய்வதுடன், ஆசைக் கட்டை அடியோடறுத்திருத்தலே வனமென வழங்கப்பெறும்.

ஆநந்த நந்தனவநமாய ஆரண்யத்தின்கண்ணே, இவ்விசுவம் யாவற்றையும் விடுத்துச்சென்று நிரந்தரம் நிலைபெற்றிருத்தல், ஆரண்யமென அறையப்பெறும்.

கம்பீரமாகிய அசலப் பிரஹ்மத்தை யகமெனச் சாக்ஷாத்கரிக்க வேண்டுமென்று உத்தேசித்து, ஸ்ரீமத்பகவத்கீதாமிருதத்தைப் பாராயணஞ் செய்வதின்கண்ணே தற்பரனாய், உயர்ந்த கிரியின் உந்நதஸ்தானத்தே வாசஞ்செய்தல், கிரியெனக் கீர்த்திக்கப்பெறும்.

சாரா சாரங்களைப் பிரித்தறிந்து, மகா மாட்சிமைதங்கிய அகண்டப் பிரஹ்மாகார விருத்தியைத் தரித்து, பருவதத்தடியில் பரமாநந்தத்தோடு வசித்தல், பர்வதமெனப் பகரப்பெறும்.

கம்பீரமாகிய பிரஹ்மாநந்த சாகரத்தில் நிலைபெற்றிருக்கும் ஞான இரத்தினத்தை நன்கு கவர்ந்து, சாஸ்திர மரியாதையைக் கடவாதுபற்றியிருத்தல், சாகரமெனச் சாற்றப்பெறும்.

அசாரமாய சம்சார சாகரத்தின்கண்ணே, ஒப்பற்ற ஒரு பரமேஶ்வரரைத் தனது வடிவமாய் நன்கு தியானித்துச் சுரஞானத்தோடு நித்தியம் இரமித்திருத்தல், சரஸ்வதியெனச் சாற்றப்பெறும்.

வித்தையின் பாரத்தால் மிகவும் நிறைந்து, சர்வ பாரத்தையும் தணரவிடுத்து, துக்க பாரத்தை யறியாதிருத்தல், பாரதீயெனப் பகரப்பெறும்.

ஞானதத்துவத்தாற் சம்பூரணத்தை அடைந்து, பூரணதத்துவ பதத்தில் நிலைபெற்று, பரப்பிரஹ்மத்தின்கண்ணே பரமாநந்தமாய் நிரந்தரம் இரமித்திருத்தல், புரீயெனப் புகலப்படும்.

முற்றுப்பெற்றது.

மடமும் வேதமும்.

கிழக்குத்திசை, கோவர்த்தனமடம், இருக்குவேதம், பிரஞ்ஞானம் பிரஹ்மம் மகாவாக்கியம், வனமும், ஆரண்யமும் நாமங்களாம், அஷ்டார்ணு, காசிபகோத்திரம், போகவார சம்பிரதாயம், பிரகாச பிரஹ்மசாரி, ஸ்ரீ பதுமபாதர் ஆசிரியர், புருஷோத்தம க்ஷேத்திரம், பூர்வ ஆம்நாயம், மகோததி தீர்த்தம், வக்கிரதுண்டர்கணேசர், ஜகந்நாததேவதை, மகாதேவர் லோகநாதர், தேவிவிமலாம்பிகை, பைரவர் காலபைரவர்.

தெற்குத்திசை, சிருங்கேரிமடம், யஜுர்வேதம், அகம்பிரஹ்மாஸ்மி மகாவாக்கியம், புரீ, சரஸ்வதி, பாரதி என்பன நாமங்கள், அஷ்டார்ணு, பார்க்கவகோத்திரம், பூரிவாரசம்பிரதாயம், சைதன்ய பிரஹ்மசாரி, ஸ்ரீ சுரேஸ்வரர் ஆசிரியர், இராமேஸ்வர க்ஷேத்திரம், தக்ஷிணம்நாயம், துங்கபத்திரை தீர்த்தம், கணேசர் விக்நராஜர், தேவதை ஆதிவராகம், மகாதேவர் வித்யாசங்கரர், (மல்லிகேஸ்வரர்) (இருஷ்ய சிருங்கர்) தேவிசாரதாம்பிகை (தேவிகாமாக்ஷி) பைரவர் உன்மத்தபைரவர்.

மேற்குத்திசை, சாரதாமடம், சாமவேதம், தத்துவமசி மகாவாக்கியம், தீர்த்தம், ஆசிரமம் என்பன நாமங்கள், அஷ்டார்ணு, அகஸ்திய கோத்திரம், கீடவார சம்பிரதாயம், ஸ்வரூப பிரஹ்மசாரி, அஸ்தாமலகர் ஆசிரியர், துவாராவதி க்ஷேத்திரம், பச்சிம ஆம்நாயம், கோமதி (கோமுகி) தீர்த்தம், கிருஷ்ணபிங்காக்ஷர் கணேசர், வாசுதேவர் தேவதை, மகாதேவர் சித்தேஸ்வரர், தேவி பத்திரகாளி, பைரவர் படுகபைரவர்.

வடக்குத்திசை, ஜோதிஷ்மடம், அதர்வண வேதம், அயமாத்மாப் பிரஹ்மம், மகாவாக்கியம், கிரி, (பர்வதம்,) சாகரம் என்பன நாமங்களாம், அஷ்டார்ணு, ஆத்திரேய கோத்திரம், ஆநந்தவார சம்பிரதாயம், ஆநந்தப் பிரஹ்மசாரி, தோடகர் ஆசிரியர், பதிரிகாச்சிரமம் க்ஷேத்திரம், உத்தர ஆம்நாயம், அலகநந்தை தீர்த்தம், கஜாநநர் கணேசர், நாராயண தேவதை, மகாதேவர் கேதார நாதர், புண்ணியகிரி தேவி, பைரவர் ஆநந்தபைரவர்.

முற்றுப்பெற்றது.